www.tamilarangam.net

# மரபு

## MARAPU

அவுஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் சமூக, இலக்கிய சஞ்சிகை



RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

15

சித்திரை 1993 வைகாசி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**HINDUSTAN IMPORTS**
**INTRODUCING**
**EXTRA SUPER QUALITY**
**JASMINE FRAGRANT RICE**

# GOLDEN GRAIN

BRAND



## GRADE: AAAA

**NOW AVAILABLE IN**
**5 KG, 10 KG & 25 KG PACK**

HINDUSTAN IMPORTS
48 - 50 DINGLEY AVENUE,
DANDENONG 3175
PHONE : (03) 794 6640

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இந்த மரபில்....


5
நாடகக் குறிப்புகள்
நித்தி
8
துவிதம்
செ. வே. கா.
14
தெருவெங்கும் தமிழ்...
விநோதினி
16
எங்கள் தேசம்
லெ. முருகபூபதி
26
அதிகாலையைத் தேடி
செழியன்
29
'மகாவம்ச'
எஸ். பொ.
39
சுகம்
அசன்


படைப்புகளில்
வரும்
கருத்துக்கள்
படைப்பாளிகளுக்கே
சொந்தம்.
கருத்துச்
சுதந்திரத்தைக்
கௌரவிக்கும்
வகையில்
'மரபு'விற்கு
உடன்பாடற்ற
கருத்துக்களும்
அதில்
வரும்.

வாசகர்களிடமிருந்து தரமான ஆக்கங்களை மரபு வரவேற்கிறது. அத்துடன் உங்கள் மனதில் எழும் எண்ணங்களை ஏனைய வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுவதற்கு 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' என்ற பகுதியையும் பயன்படுத்தலாம். எழுதுவன யாவும் சுருக்கமாக அமைதல் விரும்பத்தக்கது.


ஆசிரியர்

விமல் அரவிந்தன்

அட்டைப்படம்

K கிருஸ்ணராஜா

சந்தா

அவுஸ்திரேலியா $12.00
இலங்கை, இந்தியா $10.00
ஏனைய நாடுகள் $30.00

தொடர்புகளுக்கு

ABIRAME PUBLICATIONS
P.O Box 232,
Wantirna South,
Victoria 3152, Australia.

அச்சுப்பதிப்பு

LASHA Prints
3 Viola Court, Mill Park
Victoria 3082.

விலை

2 வெள்ளிகள்

www.tamilarangam.net



மரபு

சுவடி 3 ஏடு 3

# பத்திரிகையாளர் மீது தாக்குதல்

பிரபலமான தமிழ்ப் பத்திரிகையாளரும், 'செந்தாமரை' வாரப் பத்திரிகையின் ஆசிரியருமான D.B.S ஜெயராஜ் மீது கனடாவில் மிருகத்தனமான தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இச் செயலை 'மரபு' மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

கருத்துக்களைக் கருத்துக்களால் சந்திக்கமுடியாத ஆற்றாமையின் வெளிப்பாடே கோழைத்தனமான இந்த வன்முறை. இது வெட்கக்கேடானதும் கேவலமானதும் ஆகும்.

எழுத்துச் சுதந்திரத்தையும், பத்திரிகைச் சுதந்திரத்தையும் இத்தகைய வன்முறைகளினாலும், காடைத்தனத்தினாலும் நசுக்கிவிட முடியாதென்பதை ஏற்கனவே ஏனைய நாடுகளில் எம்மவரிடையே நடைபெற்ற பல சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. வரலாறு கற்றுத்தரும் இந்தப் பாடத்தினைக் கனடாவில் வன்முறையில் ஈடுபட்டவர்கள் இப்பொழுது மீண்டும் புதிதாகப் படித்துக் கொள்ளப்போகிறார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

இந்த வன்முறையில் ஈடுபட்டவர்களை உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் ஒரே குரலில், வேறுபாடுகளை மறந்து கண்டிப்பதைக் காண்கிறோம். இந்த ஒருமித்த அபிப்பிராயம், இதுபோன்ற கேவலங்கள் மீண்டும் நடக்காமல் இருக்கவேண்டும் என்ற விருப்பத்தையே வெளிப்படுத்தி நிற்கிறது.

*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாடகக் குறிப்புகள்

# கலையும் நிதியும்

– நித்தி

ஒரு நண்பர் கவலையும் பகிடியுமாய்ச் சொன்னார்: ''கோவிலிலை என்னைக் கண்டவுடனை சனமெல்லாம் ஓடுது. ஒருத்தரும் நிண்டு கதைக்கினமில்லை.'' நண்பரைக் கண்டு மக்கள் மருண்டோடக் காரணம், நண்பர் எந்தநாளும் ரிக்கற் விற்றுத் திரிவதுதான். கலை விழா, தமிழ் விழா, நாடகம், பரதநாட்டியம், டின்னர் டான்ஸ், மெல்லிசை, பொப்பிசை, றபிள், சினிமா நடிகர் வருகை, இராச் சாப்பாடு, கோயில்... என்று பட்டியல் நீண்டுகொண்டே போகும். நண்பருக்கோ எதற்கும் உதவும் நல்ல மனம். ரிக்கற்றுடன் நிற்பார். யாரைக் கண்டாலும் ''ஒரு ரிக்கற் எடுக்கிறியளோ?'' என்றுதான் பேச்சையே ஆரம்பிப்பார். வருடத்தில் தவறாமல் எல்லா நேரமும் ஏதாவது ஒன்று இருக்கும். நிகழ்ச்சிகளுக்குக் குறைவில்லை.

இன்னொரு நண்பர் நாடகத் துறை விற்பன்னர். மிகவும் உயர்ந்த தரமுள்ள நாடகங்களையெல்லாம் நெறியாள்கை செய்தவர். அவர் சொன்னார்: ''மாதக் கணக்காய் ஒத்திகைகள் நடத்தி, இரவு பகலாய்ப் பாடுபட்டு ஆயத்தங்கள் செய்து, ஹோல் புக் பண்ணி, சொந்தக் காசையெல்லாம் செலவழிச்சு, கடைசியிலை வீடு வீடாய்த் திரிஞ்சு ரிக்கற்றும் விற்றுத் திரியவேணுமென்றால் எங்களுக்கு உது தேவையில்லை. நான் பேசாமல் இருப்பன்.'' சொன்னாற் போல் என்ன? பேசாமல் இருக்க அவரால் முடியாதென்பதும் உண்மை.

மற்றும் சிலரது பிரச்சினை வேறு. ''நல்லதொரு நாடகத்தைத் தயாரித்துவிட்டு 'ரிக்கற் வாங்குங்கள், வந்து பாருங்கள்' என்று கேட்டால் காசு யாருக்குப் போகிறது என்று கேட்கிறார்கள். நட்டம் வரக்கூடிய அளவுக்குக் குப்பை மலிவாய்ப் போட்டாலும் இதே கேள்விதான்.''

www.tamilarangam.net



வீடு வீடாகவும், ஆள் ஆளாகவும் பிடித்து ரிக்கற் விற்பது தமிழர்களின் ஒரு 'பாரம்பரியம்' ஆகிவிட்டது. சொந்த நாட்டை விட்டு வளர்ச்சியடைந்த நாடுகளில் போய்க் குடியேறி வாழ்ந்த போதிலும், அங்கும் இந்நிலை மாறவில்லை. ஏனைய இனங்களைச் சேர்ந்தவர்கள் இதைச் செய்வதில்லை என்பதை நேரில் பார்த்த பின்னரும் எம்மில் மாற்றமில்லை. இதற்குக் காரணங்களும் உண்டு.

ஒரு குறிப்பிட்டளவு பணத்தை வைத்திருக்கும் ஒருவர் அதனைப் பலவழிகளில் செலவு செய்யலாம். உணவோ, உடையோ வாங்கலாம்; வீட்டுக்குச் சாமான் வாங்கலாம்; பிற்காலத்துக்கோ பிள்ளையின் 'சீதனத்துக்கோ' சேமிக்கலாம்; சுற்றுப் பயணம் போகலாம்; நாடகங்களும் பார்க்கலாம். ஒருவர் இதில் எதை அல்லது எவற்றைச் செய்கிறார் என்பது அவர் பெறும் திருப்தியைப் பொறுத்த விஷயம். பணத்தைச் செலவுசெய்யும் போது நாங்கள் எப்பொழுதும் மாற்றாகப் பெறுவது 'திருப்திகளை'யே.

ஒரு நாடகத்துக்குப் போவதால் தமது பணத்துக்குரிய பெறுமதியைப் பெறலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்தால்தான் ஒருவர் தாமாகவே நாடகம் பார்க்கப் போவார். அப்படி இல்லாத பட்சத்தில் அவருடைய தலையிலே போய் ஒரு ரிக்கற்றைக் 'கட்டிவிட' வேண்டிய தேவை ஒருவருக்கு ஏற்படுகிறது. அப்பொழுது அவர் ''இந்தக் காசு யாருக்குப் போகிறது?'', ''இந்த நிகழ்ச்சி எந்த நிதிக்கு?'' என்பன போன்ற கேள்விகளையெல்லாம் கேட்கிறார். இவற்றுக்கு நல்ல விடைகளைச் சொல்ல வேண்டிய கடப்பாடு ரிக்கற் விற்பவருடையதாகிறது. ஒரு கோயில் நிதிக்கோ, அகதிகள் நிதிக்கோ அல்லது அதுபோன்ற வேறு நிதிக்கோ என அவர் மறுமொழி சொல்கிறார்.

நிகழ்ச்சியைப் பார்க்கப் போன அன்பருக்கு, அது ரசிக்கக்கூடிய நல்ல நிகழ்ச்சியாக இருக்கும் பட்சத்தில், மிகுந்த திருப்தி ஏற்படுகின்றது. நிகழ்ச்சி சுமார் என்றால் ''சரி போகட்டும், நல்ல விஷயத்துக்குத் தானே காசும் போகுது'' என்று தன்னைச் சமாதானம் செய்து கொள்ளக் கூடும். நிகழ்ச்சி மோசமாக இருக்கும்போது ''தலையிடியையும் விலைக்கு வாங்கி, நேரத்தையும் மண்ணாக்கியாச்சு. காசை மட்டும் கேட்டு வாங்கிக்கொண்டு ஆளை விட்டிருக்கலாம் தானே'' என்று திட்டிக் கொண்டு வெளியே வருகிறார். இப்படி வருபவரை இன்னொரு நாளில் இன்னொரு நிகழ்ச்சியில் கொண்டுபோய் இருத்துவது இலகுவானதா? இப்படியே நாலைந்து தரம் ஏமாந்த பிறகு அவர் ரிக்கெற்றைக் கண்டதும் வெருண்டோடுவதில் என்ன ஆச்சரியம்?

ஆகவே எமது சமூகத்தில் அரங்கக் கலைகளுக்கும் மக்களுக்குமிடையே ஒரு 'பிணைப்பு' ஏற்பட வேண்டுமானால் தரமில்லாமலும், அக்கறை எடுக்காமலும் நிகழ்ச்சிகள் தயாரித்து, அவற்றுக்கு 'நிதியுதவி' என்ற முலாம் பூசி மக்கள் தலையிலை கட்டியடிப்பதை நிறுத்த வேண்டும்.

www.tamilarangam.net



நல்ல நோக்கங்களுக்கு நிதி சேகரிப்பதற்காகக் கலை நிகழ்ச்சிகள் நடாத்துவதில் ஒரு பிழையுமில்லை என்பது மட்டுமல்ல; இது ஒரு நல்ல விஷயமும் ஆகும். ஆனால் இது துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு உரியதல்ல. சிலவேளைகளில், நோக்கத்தின் பாற் கொண்ட பற்றினால் அன்றி, வேறு காரணங்களுக்காக நிதிப் பெயரைப் பயன்படுத்தும் செயலைக் காண்கிறோம்.

'நிதியுதவி' நிகழ்ச்சிகள்கூட பண நஷ்டத்தில் முடிவதையும், மற்றும் சிலசந்தர்ப்பங்களில், சேர்த்ததில் முக்கால்வாசிக்குமேல் செலவாகிப் போவதையும் காணலாம். நல்ல கலை நிகழ்ச்சியொன்று தேறுமாயின், இதைப் பற்றியெல்லாம் கவலையில்லை. ஆனால் காசும் மிஞ்சாமல் கலையும் மிஞ்சாமல் போகும்போது இதெல்லாம் எதற்காக என்ற கேள்விக்கு இடமேற்படுகிறது. பொறுப்பற்றும் சிறுபிள்ளைத் தனமானதுமான செயற்பாடுகளை மக்களிடையே கொண்டுசென்று விற்க ஒரு முத்திரையாக அகதிகளையும், கோயில்களையும் பயன்படுத்துவது கண்டிக்கப்பட வேண்டியது.

எனவே, நல்ல நிகழ்ச்சிகளை – அவை நிதியுதவிக்காக நடக்கிறதோ இல்லையோ – மக்கள் தாமாகவே முன்வந்து போய்ப் பார்க்கும் நிலை உருவாக வேண்டும். கலைஞர்களிடமிருந்து தரத்தினை மக்கள் உரத்துக் கோரவேண்டும். பார்வையாளர்களை அவமதிப்பது போன்ற நிகழ்ச்சிகளை நிதிக்காகவும் நடத்தக் கூடாது.

***


# முத்தமிழ் விழா

*இடம் : LATROBE பல்கலைக்கழகம்*
*திகதி : 23.05.1993*
*நேரம் : காலை 10.00 முதல் இரவு 9.30*

இலங்கைத் தமிழ்ச் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ்விழா மூன்று அரங்குகளாக வகுக்கப்பட்டுள்ளன. காலையில் ஆராய்ச்சிக் கட்டுரைகளும், மாலை கலாசார செயற்திட்ட வகுப்புகள், கண்காட்சிகளும், இரவு கலை இலக்கிய நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன. புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடையே சிறுகதை, கவிதை, ஓவியப் போட்டிகளை நடாத்தி, இத்தினத்தில் பரிசில்கள் வழங்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியில் சங்க உறுப்பினர்களைத் தொடர்பு கொள்ளவும்.

**P.O Box 103, Glenhuntly, Vic 3163.**

*தொலைபேசி (மெல்பன்) : 569 4836, 404 3007, 439 1026.*

www.tamilarangam.net



# துவிதம்



விஜய் தான் தேத்தா.

(ஹிந்திக் கதை)

(2)

(1991 தைமாத 'மனுஷி'
ஆங்கில இதழில் இருந்து தமிழில் செ.வே.கா.)

தசையும் இரத்தமுமுள்ள மனிதர்கள் பொன்னிலும் பார்க்க முக்கியமானவர்களல்லவா? உயிரைவிட உடமைகள் பெறுமதி கூடியவை எனலாமா? வாழ்க்கையின் அர்த்தம் பற்றிய எல்லா வினாக்களுக்கும் இங்கல்லவோ விடையிருக்கிறது.

மாப்பிள்ளை தன்னுடைய கணக்கிலும் பெண் தனது எண்ணங்களிலுமாய் அமிழ்ந்து போயிருந்தார்கள். மாடுகள் தம்பாட்டில் அதேகதியில் போய்க்கொண்டிருந்தன. புறப்பட்ட பயணம் முடிந்தாக வேண்டும். ஊர்வலம் இறுதியாய் செட்டி வீட்டு வாசலுக்கு வந்தது. பாட்டும் இசையும், மேளமும் குழலும் வரவேற்க மணப்பெண் பின்கட்டுக்குள் சேர்ந்தாள். அவளைப் பார்த்த யாரும் அவளைப் புகழாமல் விடமுடியவில்லை. இதுவல்லவோ அழகு!

அந்திசாய்ந்தபோது மணவறையில் நெய்யூற்றிய விளக்குகள் ஏற்றப்பட்டன. நள்ளிரவாகும் போது மாப்பிள்ளை வந்தான். வந்ததும் சிறிதும் தாமதியாமல் அறிவு மணிகளை உதிர்க்க ஆரம்பித்தான். குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றுவதே அவளது தலையாய கடன்; மாமிக்கும் மாமனுக்கும் சேவை செய்ய வேண்டும்; அவளுடைய கற்பு அவளுடைய கையில்தானிருக்கிறது. இருக்கிற இரண்டொரு நாட்களுக்குள் உடலில் எதற்கு ஆசையை வளர்க்க வேண்டும்?

www.tamilarangam.net



இரண்டு நாட்கள் சேர்ந்திருந்துவிட்டு ஐந்து வருடங்களுக்கு இருவரும் வேதனைப்பட வேண்டும். நாட்கள் பறக்கும். ஐந்து வருடங்களும் விரைவிற் கழியும். அப்ப எங்களுக்கு என்ன இராது? இந்த மணவறையும் விளக்குகளும் ஓடிவிடமாட்டா. இந்த இரவுகளும் கட்டிலும் இன்னும் இருக்கும். அவள் எந்தவகையிலும் மனத்தை அலட்டிக் கொள்ளக்கூடாது. கண்வெட்டி விழிக்கமுன் ஐந்து வருடங்கள் இந்தா போகும்.

மாப்பிள்ளையின் இந்த ஞான முத்துக்களை பெண் எதுவும் சொல்லாமல் கேட்டாள். எதையும் சொல்லவோ, செய்யவோ எதையும் மாற்றவோ அவளுக்கு அதிகாரம் இல்லை. அவளுடைய புருஷனின் முடிவே அவளுடைய முடிபு. தகப்பனுடைய தீர்மானமே அவளுடைய தீர்மானம். பணத்தேவதையின் தீர்மானமே தகப்பனின் தீர்மானம். அவனுடைய பேராசை எதைச் சொல்கிறதோ அதையே பணத்தேவதை செய்வாள். இந்த ஞானமுத்துக்களைத் தியானிப்பதில் இரவு கழிந்தது. இரவு போனபோது, வானிலே கண்சிமிட்டிக் கொண்டிருந்த 9 கோடி நட்சத்திரங்களும் வெளிறி ஓடிப்போயின.

தொலைவில் காட்டிலே மயக்கத்தில் இருந்து விழித்த பேய் தன்னைச் சுற்றிப் பார்த்தான். காடு முழுவதுமே வெறுமையாய் இருந்தது. பச்சை மரங்கள் எல்லாம் வெற்றிப் போய் இருந்தன. ஆழமான இருள் அனைத்தையும் அப்பிக் கொண்டிருந்தது. எங்கே அந்தப் பெண் போனாள்? அவளுடைய வெறியூட்டும் கண்கள் எங்கே? அவளுடைய இனிய முகமும் செவ்விதழ்களும் எங்கே? இதுவெல்லாம் ஒரு கனவா? மயக்கத்தில் இருந்து விழித்தபோது தனது மனத்தை யாரோ பாலால் கழுவியது போல, பொய்மையையும் போலியையும் முற்றாய் நீக்கிவிட்டது போல அவன் உணர்ந்தான். இன்றைக்கு உதித்த சூரியன் போல் முன்பு ஒருபோதும் கண்டதில்லை. உலகம் முழுவதும் தனது ஒளியைப் பரப்பிய ஒரு பெரிய செங்கோளமாய்த் தோன்றியது. இந்தக் காற்றும் எவ்வளவு இதமாய் இருக்கிறது. கண்ணுக்குத் தெரியாத ஊஞ்சல் ஒன்றில் பசிய கொடிகளும் இலைகளும் ஆடின. அவனுடைய மனம் ஆயிரம் உருவெடுத்து இயற்கையிலுள்ள ஒவ்வொரு பொருளையும் தழுவியது.

இன்றைய சூரிய அஸ்தமனத்தைப் போல முன்பு ஒருபோதும் இருந்ததில்லை. மேற்கிலே ரோசா நிற வெளிச்சம் கொட்டிக் கிடந்தது. பூமி கண்ணைக் கூசுகிற வெளிச்சத்திலோ இருளிலோ மறைந்து போகவில்லை. சூரியனையோ சந்திரனையோ எந்த நட்சத்திரத்தையோ வானத்தில் காணவில்லை. இயற்கை தன்னை மிகவும் மெல்லிய துகிலினால் போர்த்திருந்தாள். இரண்டுமே – முகமும் துகிலும் கண்ணுக்குத் தெரிந்தன. சிறிது நேரத்தில் இயற்கை தன்னுடைய போர்வையை மாற்றினாள். இந்த இருண்ட போர்வையிலே 9 கோடி நட்சத்திரங்கள் பதிக்கப்பட்டு இருந்தன. அவளுடைய முகத்தை, மரங்களை, பச்சிலைகளை மங்கலாகக் காண முடிந்தது – கனவொன்று சிறிது சிறிதாகப் பின்னப்படுவதுபோல. முன்பு ஒரு போதும் இயற்கை இவ்வளவு மையலை ஏற்படுத்தியதில்லை.

www.tamilarangam.net



மணப்பெண்ணின் முகமல்லவோ இவ்வளவு அற்புதத்தையும் சாதித்தது.

மணப்பெண்ணின் புருஷன் அவளுடைய இளமையிலே தனது கண்களைப் பதிக்காமல் தன்னுடைய பயணத்தைத் தொடங்கினான். வைரமும் முத்தும் நிறைந்த ஒரு பையை இடுப்பிலே கட்டி இருந்தான். இன்னும் இரண்டு அவனுடைய தோள்களில் தூங்கின. யாவற்றிலும் பிரகாசமான வியாபார சூரியன் அவனுக்கு முன்னே வானத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்தது. காசு உழைப்பதற்கும், இலாபத்திற்கும், இவற்றால் வருகிற சந்தோஷத்திற்கும் எல்லையேது? காட்டினூடாய் அவன் வந்தபோது பேய் அவனை உடனடியே யாரென்று அறிந்து கொண்டான். ஒரு மனிதவுருவோடு அவனை அணுகி, சகோதரா, உன்னுடைய கல்யாண பூணூல் இன்னும் அவிழாமல் உன்னுடைய மார்பில் தொங்குகிறதே, இவ்வளவு விரைவாய் எங்கே போகிறாய்?

செட்டியின் மகன் சொன்னான், ''பூணூலை வேறு நாட்டுக்குப் போனதும் கழட்டிக் கொள்வதில் பிழையெதுவுமில்லை.''

நீண்ட தூரத்துக்குப் பேய் செட்டிமகனோடு நடந்தான். இவன் வியாபார அலுவலாக வெளிநாடு செல்கிறானென்றும் ஐந்து வருடத்திற்குத் திரும்பி வரமாட்டானென்றும் அறிந்து கொண்டான். செட்டி மகனுடைய பேச்சின் முறையையும் பாவனையையும் அவன் நடக்கும் முறையையும் பாணியையும் நன்கு அவதானித்துக்கொண்டு பேய் செட்டிமகனிடமிருந்து விடைபெற்றான். செட்டிமகனுடைய உருவத்தில் நாளைக்குக் காலையிலேயே செட்டி வீட்டுக்குப் போனால் யார் என்னை என்ன கேட்பார்கள் என்று பேய் யோசித்தான். என்ன நல்லதிர்ஷ்டம்! எப்படி வேளை சேர்ந்து வந்தது! மற்றச் சிக்கல் எல்லாவற்றையும் காலம் பார்த்துக் கொள்ளட்டும். கடவுளுக்கு என்னுடைய வேண்டுதல் காதில் எட்டியிருக்கிறது. அதற்கு மேல் அவனால் ஒரு கணமும் பொறுக்க முடியவில்லை. இம்மியும் பிசகாமல், செட்டியின் உருவத்தைத் தனதாக்கிக் கொண்டு, பேய் செட்டியின் கிராமத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அவன் மனம் கொள்ளாதளவுக்குக் களிப்பும் திருப்தியும் அவனுக்கேற்பட்டன.

இரவுவர இன்னும் மூன்று மணித்தியாலம் இருந்த போதிலும் வானம் இருண்டு போயிருந்தது. வடக்கேயிருந்து பயங்கரமான கறுப்பும் மஞ்சளுமாய் புயல்மேகம் வந்து கொண்டிருந்தது. சிறிது சிறிதாய் இருள் அடர்ந்தது. தன்கையே தனக்குத் தெரியாதளவு இருள். இயற்கையின் கனவுகள்தான் எவ்வளவு விநோதமானவை! இந்தக் கனவல்லவோ காலுக்குக் கீழே மிதிபடும் தூசுக்குச் சூரியனையே மறைக்கும் வல்லமையைக் கொடுத்தது! தூசு வானில் எழுந்தது. புயல் அடித்து எழுப்பிய காற்று வீரிட்டுக் கத்தியது. மலைகளை அடியோடு அதிரவைக்கும்படி சுழல் காற்றடித்தது.

காற்று பாரிய மரங்களை அவற்றின் திமிரை வேஷங்கிழித்து ஒவ்வொன்றாய் வேரோடு சாய்த்தது. வளையும் புதர்கள் தணிந்து

www.tamilarangam.net



புயலில் குனிந்து தப்பிக் கொண்டன. காலில் மிதிபடும் புல்லும் காயப்படாமல் தப்பியது. புயல் அவற்றை விசாரித்துத் தடவிக் கொண்டு மேலாலே கடந்து போனது. எல்லாத் தாவரங்களும் தொட்டிலிற் போல ஆடின. பெரிய பறவைகளைக் காற்று அடித்துச் சுழற்றிற்று. சிறிய பறவைகள் மரத்தில் ஒட்டிப்போனவைபோல இருந்தன. பறப்பது சாத்தியமில்லாதிருந்தது.

வானம் முழுவதும் புயல் ஆட்சி செய்தது. காடு முழுவதுமே கத்துவதுபோல ஒரு பலத்த சரசரப்பு காற்றை நிரப்பிற்று. சூரியனது ஒளி பூமியின் தூசிலே அமிழ்ந்து போனது. சுழல்காற்றின் இந்தத்தாண்டவம், மண்ணின் இந்தப் பாய்ச்சல் எவ்வளவு விநோதமானது! இயற்கை புயலில் தன்னை ஒளித்துக் கொண்டது. குன்றையோ, மரத்தையோ, புதரையோ, நிலத்தையோ எதையும் காணவில்லை. யாவும் உருவிழந்து கண்ணுக்குப் புலப்படாதவையாகிப் போயின. இயற்கையின் இந்தச் சிறிய அருட்டலின் முன்னே மனிதப் பிரயத்தனமும் சாதனையும் வல்லமையும் அகங்காரமும் பயனற்றுப் போயின.



இயற்கையின் அடுத்த காட்சி ஆரம்பமாகியது. வெளிச்சம் அங்குமிங்குமாய்த் தெறிக்கப்பட்டது. காலும் கையும் கண்ணுக்குத் தெரிந்தன. குன்றுகள் தம்மிடத்திலே தோன்றின. பொன்வட்டம் போலச் சூரியன் தோன்றியது. மரங்களும் புதர்களும் காற்றும் தத்தம் இடத்திலே தோன்றின. இதுவென்ன விந்தை! திடீரென்று மழை கொட்ட ஆரம்பித்தது. நீர்த்துளிகள் ஒன்றையொன்று மோதின. மேகங்கள் வாய்திறந்தன. நீர் ஓடைகளாயும் அருவிகளாயும் ஓடியது. எங்கும் நீர் பரந்தது. சூரிய ஒளி நிலத்தின் ஸ்நானத்தைப் பார்த்து நின்றது.

இவ்வளவும் இத்தனை விரைவாய் நடந்து போனது எப்படி என்று பேய் வியந்தான். நம்புதற்கு அரிதான இதை இயற்கையின் எந்த வகைக்குள் சேர்ப்பது? உண்மையில் என்ன நடந்தது? எப்படி நடந்தது? அவனுடைய உள்ளத்தின் உள்ளிருந்த புயல்தான் இப்படிப் புலப்பட்டதோ? இயற்கையின் இந்த விளையாட்டு அவனுடைய இதயத்தினுள்ளேதான் எங்கேயோ புதைந்திருந்ததோ? இந்த யோசனைகளில் தன்னை இழந்து தன்னுடைய திட்டங்களைப் போட்டுக்கொண்டு அவன் சுறுக்காய் நடந்தான். முதலிற் செட்டியின் கடைக்குப் போனான். கணக்குகளில் அமிழ்ந்திருந்த செட்டிக்கு, தலையை நிமிர்ந்தபோது தெரிந்த காட்சியை நம்பமுடியவில்லை. அவனுடைய மகன் எப்படித் திரும்பி வரமுடியும்? ஒருபோதும் அவன்

www.tamilarangam.net



தகப்பன் சொல் தட்டியதில்லை. கல்யாணம் மனிதர்களைச் சதத்திற்கும் உதவாதவர்களாக ஆக்கிவிடுகிறது. உண்மையில் ஒன்றில் வியாபாரத்தைப் பார்க்கலாம் அல்லது பெண்பிள்ளைக்குப் பின்னால் போகலாம் – இரண்டையும் செய்வது சாத்தியமில்லை.

தகப்பன் வாய் திறக்கமுன்பே, என்ன வரப்போகிறது என்று இந்த மகன் தெரிந்து கொண்டான். கைகளைக் கூப்பி, முதலில் நான் சொல்வதைக் கேளுங்கள். வியாபார அலுவல் ஒன்றைத்தான் உங்களிடம் கேட்க வந்தேன். நீங்கள் சொன்னால், வீட்டுப் பக்கம் முகத்தையும் காட்டாமல் மீண்டும் பயணம் போவேன். போகும் வழியில் தன்வசமிழந்து தவத்தில் இருந்த புனிதர் ஒருவரைக் கண்டேன். அவருடைய உடல் முழுவதும் கறையான் போர்த்திருந்தது. கவனமாய் அவற்றை அகற்றி, அவரைக் குளிப்பாட்டி உணவும் நீரும் கொடுத்தேன். அவர் அகமகிழ்ந்து எனக்கு ஒரு வரம் தந்தார். ஒவ்வொருநாளும் காலையில் நான் எழும்போது எனக்கு ஐந்து பவுண் காசுகள் கிடைக்கும். ஆனால் வெளிநாட்டுக்குப் போகிறதென்று நான் யோசித்தாலும், வரம் வலுவிழந்து போகும். எனவேதான் என்ன செய்வதென்று உங்களைக் கேட்க வந்தேன். உங்களுடைய முடிவின்படி நான் நடப்பேன்.

இப்படிப்பட்ட வரத்தின் முன்னால் ஒரு முடிவுதான் சாத்தியம். களிப்புடன் செட்டி ஒத்துக் கொண்டான். செட்டிச்சிக்கும் மிகுந்த மகிழ்ச்சி. அவளுடைய ஒரே மகன் அவளுடன் இருப்பதோடு அவனுடைய உழைப்பும் இரட்டிப்பாகிறது. பெண்ணுக்கு மகிழ்ச்சியும் ஆச்சரியமும் பெருமிதமும் – தனது அழகை விட்டு விட்டுப் போகத் தன்னுடைய கணவனால் முடியவில்லை. மூன்று நாளைக்குள்ளேயே மாப்பிள்ளை திரும்பிவிட்டார்.

கடையில் இருந்து திரும்பியதும் சாப்பிட்டபின் மாப்பிள்ளை படுக்கை அறைக்குள் வந்து படுக்கையில் சாய்ந்தான். நெய்விளக்குகள், பூக்கள் நிரம்பிய கட்டிலுக்கு ஒளியேற்றின. இந்த எதிர்பார்ப்பிலும் பார்க்கச் சுவையான எதுவும் இருக்கமுடியுமா? காற்சிலம்புகளின் கிண்ணொலி கேட்டது. இதனிலும் இனிய இசை எங்காவது இருக்கிறதா? மலராலும் மணியாலும் தன்னை அலங்கரித்துக் கொண்டு, பெண் அறையினுள் நுழைந்தாள். வேறு எந்த அழகு இதை வெல்ல முடியும்? அறைமுழுவதும் மெல்லிய நறுமணம் பரவியது. இதைவிடவும் ஒரு நறுமணம் எதுவும் உண்டா? இந்த மணமல்லவோ பேயினுடைய உறங்கிக்கிடந்த உணர்வுகளை அன்றைக்கு அருட்டி எழுப்பியது! இன்றைக்கு இருவரது கண்களும் ஒன்றையொன்று சந்தித்தன. தன்னுடைய ஆசை இவ்வளவு கெதியில் நிறைவேறும் என்று அவன் கனவு கூடக் கண்டதில்லை.

சிறிதும் நாணமின்றி, மணப்பெண் நடந்து வந்து அவனருகே உட்கார்ந்தாள்.

(தொடரும்)

www.tamilarangam.net



# பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய கருத்தரங்கம்

Melbourne Kalai Vattam
P.O. Box 113, Clayton, Victoria 3168
Australia.

மெல்பன் கலை வட்டம் வெளிநாடுகளில் வாழும் தமிழ்ப் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய கருத்தரங்கொன்றை இவ்வாண்டின் இறுதிப் பகுதியில் நடாத்த எண்ணியுள்ளது.

அந்நிய தேசத்தில் வந்து குடியேறியுள்ள நாம், எமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிப் போதியளவு சிந்தித்துள்ளோமென்று கூறமுடியாது.

எமது அடுத்த தலைமுறையினர் நிற பேதத்தையும், நிறப் பிரச்சினையையும் எவ்விதம் எதிர்கொள்வார்கள்? கலாசாரம், மொழியறிவு, சமயம் ஆகிய விஷயங்களில் அவர்களுக்கு எத்தகைய வழிநடத்துதலை நாம் வழங்கலாம் அல்லது வழங்குதல் சாத்தியம்? புதிய தலைமுறையினருக்கும் எமக்குமிடையே வயதினால் மட்டுமின்றி, பண்பாடு, பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறை போன்றவற்றினாலும் எழப் போகும் பெரிய இடைவெளியை நாம் எப்படிச் சாந்திக்கலாம்.

இந்தக் கேள்விகளுக்கும், இவை போன்ற மற்றக் கேள்விகளுக்கும் நாம் விடைகாண வேண்டியது முக்கியம். எமது பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை பற்றிய மன அங்கலாய்ப்பும், சிலவேளைகளில் ஒருவித பயமும் எம்மவரிடையே காணப்படுகின்றன. எனினும், எமது சமூகத்தில் இவ்வித விஷயங்களைப் பற்றிய சரியான அறிவோ, போதிய பிரக்ஞையோ இருப்பதாக நாம் கருத முடியாது. இவற்றை முன்னிலைப் படுத்திய முறையான ஆய்வுகளும் போதியளவில் நடைபெறவில்லை.

இந்தப் பிரச்சினைகள் பற்றிய அறிவையும், பிரக்ஞையையும் விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஒரு முன் முயற்சியாக மெல்பன் கலை வட்டம் இவ்வாண்டில் ஒரு கருத்தரங்கை ஒழுங்கு செய்யத் தீர்மானித்துள்ளது. அவுஸ்திரேலியாவிலுள்ள பல்வேறு சமூக நிறுவனங்களின் பங்குபற்றுதலுடனும், சர்வதேச ரீதியிலான பங்களிப்புடனும் இதனை நல்ல முறையில் செய்யலாமென நம்புகிறோம். இப்பணியில் எம்முடன் சேர்ந்து பங்குகொள்ள விரும்பும் நிறுவனங்களும், தனிப்பட்டவர்களும் தயவு செய்து எம்முடன் தொடர்பு கொள்க.

அவுஸ்திரேலியாவிலிருந்தும், பிற நாடுகளிலிருந்தும் இக்கருத்தரங்கிற்கு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்க விரும்புவோரையும் தயவு செய்து எம்முடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்கள் பெறுமாறு வேண்டுகிறோம். (நேரடியாகக் கலந்துகொள்ள முடியாதவர்களின் கட்டுரைகள், கருத்தரங்கில் வாசிக்கப்படும்).

www.tamilarangam.net



# 'தெருவெங்கும் தமிழ் முழக்கம் செய்வோம்!'

தொகுப்பு விநோதினி

இலங்கைத் தமிழன் இன்று உலகப் பிரஜையாகிவிட்டான். அவன் நுழையாத நாடு உலகில் இல்லை எனலாம். வெவ்வேறு நாடுகளில் வாழ்வதோடு நின்றுவிடாமல், தன் 'இருப்பை' அந்நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்துவதில் அவன் முன்னிற்கின்றான். இந்தவகையில் நாம் அறிந்தவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம் – (ஆர்).

## முழக்கம் 1

சிட்னியில் தமிழர்கள் செறிந்து வாழும் Homebush பகுதியில் தனியார் நிறுவனமொன்றின் கட்டடச் சுவரில் எழுதியிருந்த வாசகங்கள் இவை.

> புன்ணாக்கு [redacted] இதை அழித்தால்
> நீ ஒரு முட்டாள்

(இதில் குறிப்பிடப்பட்டிருந்த தனிப்பட்ட ஒருவரின் பெயர் நன்மை கருதி நீக்கப்பட்டுள்ளது)

## முழக்கம் 2

Monsieur le Directeur,

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கடந்த 7 வருடங்களுக்கு மேல் வசித்து வரும் திரு, திருமதி ———————— ஆகிய நாம் தங்களுக்கு அறியத்தருவது என்னவென்றால்; கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக எமது தபால் பெட்டியில் உள்ள பெயர்கள் தொடர்ந்து நாம் ஒட்ட ஒட்டக் கிழிக்கப்பட்டுக்கொண்டே வருகிறது. இதனால் எமக்குக் கிடைக்க வேண்டிய பதிவுத் தபால்களும், பல பிரதானமான

www.tamilarangam.net



கடிதங்களும் எமக்குக் கிடைக்கவில்லை. இதனால் வேதனையடைந்த நாம் எமது தபால்பெட்டியில் உள்ள பெயர்களை யார் கிழிப்பது என்பதை அறிவதற்கு இரகசியமான முறையில் இரவு பகலாகக் கண்காணித்து யார் கிழிப்பது என்பதை அறிந்து அந்த நபரிடம் அதைக் கேட்கச் செல்ல கடந்த சனிக்கிழமை (30.01.1993) அன்று அது பெரிய சண்டையில் முடிந்தது. இதே கட்டடத்தில் குடியிருப்பவரே (ஓர் தமிழ் அன்பர்) இதைச் செய்கிறார். எனவே இனிமேலும் தொடர்ந்து எமது பெயர் கிழிபட்டு வந்தாலும், தபால் பெட்டியில் பெயர் இல்லாவிட்டாலும் 04 இலக்கங்கொண்ட முதல் வரிசையில் மேலிருந்து கீழ் உள்ள கடைசிப் பெட்டியில் எமக்கு வரும் தபால்களைத் தயவுசெய்து தபால் கொண்டுவருபவர்கள் போடவும். அல்லாவிட்டால் நாம் இருக்கும் கீழ் அறை தபால் பெட்டிகளுக்கு முன்பாக மாடி செல்லும் வழிக்கு அருகில் உள்ள பச்சை நிறக்கதவின் அருகில் இருக்கிறது. எனவே தயவு செய்து தங்கள் தபால் சேவையாளர்கள் எமது கதவைத் தட்டியும் தரலாம். இச்சம்பவம் தொடர்பாக இங்குள்ள பொலிஸ் நிலையத்திலும் புகார் செய்துள்ளோம். தங்களது சிரமத்தைப் பாராது எமது இந்தக் கடிதத்தைக் கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். நன்றி.

**(தகவல் : ஓசை இதழ் 11)**

## முழக்கம் 3

இரண்டு கோஸ்டிகளுக்கிடையில் தனிப்பட்ட விரோதம். காணும் இடங்களில் எல்லாம் தனகல்கள் தொடர்கின்றன. 'பெரிதாக ஒன்று' நடத்த வேண்டுமென்ற வெறியும் வளர்கிறது.

மார்ச் மாத இறுதியில் திடீரென்று தெருவில் துவக்குகள், ஆயுதங்கள் சகிதம் வந்திறங்கிய இரு கோஸ்டிகளுக்குமிடையில் கைகலப்பு. ஒருவருக்குத் துவக்குச் சூடு. பலருக்குக் காயம். காவல் படையினரின் வரவைத் தொடர்ந்து கைகலப்பு முடிவுக்குக் கொண்டுவரப்படுகிறது.

மறுநாள் கனடிய தினசரிகளில் பெரிய எழுத்துக்களில் செய்திகள்... ''Toronto வில் இலங்கைத் தமிழ்க் கோஸ்டிகளிற்கிடையில் துப்பாக்கிச் சண்டை...'', ''கனடாவில் இலங்கைத் தமிழர்களுக்குத் தடை விதியுங்கள்...''.

பிந்திய செய்திகளில் 55 ஆயிரம் டொலர்கள் பெறுமதியான ஆயுதங்கள் தமிழர்களால் கனடாவுக்குள் கடத்தப்பட்டுள்ளன. இதில் ஈடுபட்டோரை விரைவில் கைது செய்து கடும் தண்டனை விதிப்போமெனக் கனடிய புலனாய்வுத் துறையினரின் அறிக்கை.

இங்கு தினசரிகளில் விபரம் அறிந்த நண்பர் வருத்தத்துடன் சொல்கிறார், ''இலங்கையில் சிங்களவரின் 'அநியாயம்' தாங்கமுடியாதென்று கனடாவுக்கு ஓடிய தமிழரின் நிலைமையைப் பார்த்தீரா ஐசே...''

www.tamilarangam.net



# எங்கள் தேசம்

– முருகபூபதி

கத்தியைக் காணவில்லை.

தேவகி வீடுமுழுவதும் தேடிப்பார்த்தாள். மீன் வெட்டும் கத்தியைக் காணவில்லை.

நல்ல கூரான கத்தி. கணவனிடம் சொல்லி ஆசையோடு வாங்கியது. நான்கு ஆண்டுகளாகப் பாவனைக்கு உதவிய கத்தி.

செபஸ்தியார் கோயில் திருவிழாவில் வெளிவீதியில் தற்காலிகமாகத் தோன்றிய கடைகளுக்குக் குடும்பத்துடன் சென்று செலவுக்கு வழிதேடக் கிடைத்த கத்தி.

மகள்மாருக்குப் பிளாஸ்டிக் வளையல்கள். மகனுக்கு பட்டரியில் ஓடும் ஜீப். 'வைன்' கொடுத்தால் ஆடும் குரங்குப் பொம்மை. வீட்டுக்கு மீன் வெட்டுவதற்குக் கூரான கத்தி.

முகம் சுழிக்காமல் கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்த கணவனுடன் அவ்வாறு கடைசியாக உலாப்போன நாள் அது.

திருவிழா முடிந்து இரண்டு வாரங்களில் கணவன் அவுஸ்திரேலியா போய்விட்டான்.

மூன்று திருவிழாக்கள் முடிந்து விட்டன. தேவகி போகவேயில்லை. பிள்ளைகளை ஆச்சியுடன் அனுப்பினாள்.

கத்தியை தேடும்போது ஜனக்கூட்டத்தின் மத்தியில் கணவன், பிள்ளைகளுடன் கைகோர்த்து நகர்ந்த காட்சியில் சஞ்சரித்தாள்.

விம்மிய ஏக்கத் தவிப்பை ஒதுக்கி, கத்தியைத் தேடினாள்.

சமையல் அறை, விறகு போடும் அட்டாளை, பாத்திரங்கள் அடுக்கும் சுவர் அலுமாரி, காய்கறிகள் வைக்கும் பிரம்புத்தட்டு.... ம்ஹூம்...

www.tamilarangam.net



காணவில்லை.

பிள்ளைகள் 'கூட்டாஞ் சோறு ஆக்கி' விளையாட எடுத்துச் சென்று பின்புற முற்றத்து பூவரசு மர நிழலில் போட்டிருக்கலாம். படியிறங்கிப் பார்த்தாயிற்று. இல்லை.

வீட்டின் உள் அறையில் முடங்கி வெளியுலக தரிசனமற்று சோகத்தை உள்வாங்கி கண்ணீரும் பெருமூச்சும் உதிர்த்துப் பொழுதைக் கரைக்கும் தங்கை ராணியிடம் கேட்டாள்.

''கத்தியைக் கண்டியா... இதுகள் எங்கே போட்டுதுகளோ தெரியவில்லை... நேரமாச்சுது... இன்னும் ஒரு மணி நேரத்தில வாலுகள் வந்திடும்.''

– தேவகி களைத்துப் போனாள்.

தனது பிள்ளைகளின் சட்டைக்குப் பொத்தான் தைத்துக் கொண்டிருந்த ராணியும் அக்காவுடன் சேர்ந்து தேடினாள்.

பூவரச மரத்தடியில் தண்ணீரும் மண்ணும் குழைத்து வீடுகட்ட முனைந்துள்ள தேவகியின் நான்கு வயது மகனும், ராணியின் ஐந்து வயது மகனும் விசாரிக்கப்பட்டார்கள்.

இருவரும் இந்தச் சகோதரிகளை அலட்சியப் படுத்தித் தமது கருமத்தில் மூழ்கினர். தாய்மாரின் இடையூறு பிஞ்சுகளுக்கு அலுப்பைத் தந்திருக்க வேண்டும்.

''நாங்க வீடு கட்டுறோம். கரைச்சல் கொடுக்க வேண்டாம்'' – தேவகியின் மகன் பெரிய மனுஷ தோரணையில் கத்தினான். அவன் அப்படித்தான். எப்பொழுதும் துடுக்காகப் பேசுவான்.

கத்தியைக் கேட்டதும் பெரியம்மாவைப் பார்த்து மிரண்டவன் ராணியின் மூத்த மகன். மிரட்சிப் பார்வை அவனது அப்பாவின் மரணம் வழங்கிய சன்மானம்.

தேவகிக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. ''வைச்சா... வைச்ச இடத்திலிருந்து திரும்ப எடுக்க முடியுதில்ல...''

''யாருக்கும் கொடுத்தீங்களா அக்கா?''

''இல்லையே... முந்தநாள் மீன் வெட்டிப்போட்டு இங்க.. இதுலதானே வச்சன்'' – பாத்திர அலுமாரியில் அடித்தட்டைக் காண்பித்தாள் தேவகி.

''கிணற்றடியில் மீன் கழுவும்போது மறதியாக அங்கேயே போட்டிருப்பீங்க...'' சொல்லிக் கொண்டே ராணி அங்கும் போய்ப்

www.tamilarangam.net



பார்த்து உதட்டைப் பிதுக்கி 'இல்லை' என்றாள்.

மீன் கடையிலிருந்து தேவகி கொண்டுவந்த பெரிய 'விளைமீன்' சுற்றிய பேப்பருடன் சட்டியில் அப்படியே இருந்தது.

''பக்கத்து வீட்டுப் பாத்திமாவிட்ட கத்தி வாங்கக்கா... நேரம் போகுது...'' – ராணி அயல் வீடுகளுக்குப் போவதில்லை.

கல்முனையிலிருந்து அகதியாகப் புறப்பட்டு நீர்கொழும்பில் தேவகி அக்காவிடம் அடைக்கலம் புகுந்தது முதல் ராணி வெளியே மட்டுமல்ல, அயல் வீடுகளுக்கும் போவதில்லை.

ராணிக்கும் பிள்ளைகளுக்கும் தேவையானவற்றை வாங்குவதற்கும், மூத்த இரண்டு பெண்பிள்ளைகளை ஊர்ப் பாடசாலையில் சேர்ப்பதற்கும் அக்காவே துணை.

ராணி, இப்படி இளம்வயதில் புருஷனைப் பறிகொடுத்து விதவைக் கோலம் பூண்டது தேவகிக்குத் தாளாத சோகம். கல்முனை, அன்னமலையில் ஊர்காவல் படையிடம் புருஷனைப் பறிகொடுத்து வீடும் இழந்து பிள்ளைகளுடன் நிர்க்கதியாகி ரயில், பஸ் ஏறி நீர்கொழும்பு அக்காவிடம் வந்து சேர்ந்தாள் நம்பிக்கையோடு.

அவள் நம்பிக்கை வீண்போகவில்லை. அக்காவுக்கு மேலும் மூன்று பிள்ளைகள், ராணியுடன் சேர்த்து. 'ராணிக்கும் பிள்ளைகளுக்கும் தேவைப்பட்டதை வாங்கிக் கொடு; பிள்ளைகளை, எங்கள் பிள்ளைகள் போகும் 'ஸ்கூலில்' சேர்த்துவிடு. பிரச்சினைகள் முடியும் வரையில் ராணியை ஊருக்கு அனுப்ப வேண்டாம் ' – அவுஸ்திரேலியாவிலிருந்து கடிதமும், 'டிராப்டும்', ஆறுதலும் வந்தன.

அயலில் குடியிருக்கும் பாத்திமாஹாராவிடம் கத்தி கேட்கலாம்; தேவகிக்கு விருப்பமில்லை. அங்கே மாட்டிறைச்சி வெட்டும் கத்திதானே இருக்கும்.

அதற்கும் அடுத்த வீட்டில் – சிசிலி அக்காவிடம் கேட்டுப்பார்க்கலாம்; விருப்பம்தான் இல்லை. அங்கு பன்றி இறைச்சி சாப்பிடுவார்கள். ஆமை அறுப்பார்கள். தேவகி வீட்டில் விரதங்களும் குடியிருக்கும்; சில சமயங்களில் 'மீன்' கொடியேறும். கொண்டுவந்துள்ள மீனை வெட்ட இனி கத்திக்கு என்ன செய்வது? நேரம் கரைகிறது.

ராணியும் கத்தி தேடிக் கிடையாமல் அலுத்துப்போய் உள்ளறையில் மீண்டும் முடங்கிவிட்டாள். இன்னும் மூன்று பொத்தான்கள் தைக்கவேண்டியிருந்தது.

தேவகிக்கு ராணியைப் பார்க்கும் போதெல்லாம் அங்கே சுட்டுக் கொல்லப்பட்ட அவள் கணவன் மீண்டும் உயிர்பெற்று வந்துவிட மாட்டானா என்ற ஏக்கம்தான் தொண்டையை அடைக்கும்.

www.tamilarangam.net



அயல்வீட்டில், ராணி வருவதற்கு முன்பே குடிவந்துள்ள பாத்திமாவின் யாழ்ப்பாண அதிர்ச்சி அனுபவங்களை கதை கதையாகக் கேட்டிருந்த தேவகிக்கு, அதன் எதிரொலிதான் ராணியின் இந்த விதவைக் கோலமோ என்ற அச்சமாகவும் இருந்தது.

காலம் காலமாக, பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த இடங்களிலிருந்து துரத்தப்பட்டிருக்கும் பாத்திமாவும் ராணியும்... இப்படி எத்தனை குடும்பங்கள்... ஓ.. . இதென்ன கொடுமை. யாரிடம் சொல்லி அழுவது... இந்தத் துயரங்களுக்கு முற்றுப்புள்ளி எப்போது... அவுஸ்திரேலியாவில் கணவனுக்கு எழுதி எழுதித் தன் சோகத்துக்கு வடிகால் தேடினாள் தேவகி.

பாத்திமா ஒருவகையில் அதிர்ஷ்டசாலி. அபுதாபியில் அவள் கணவன். உழைத்து அனுப்புகிறான். இங்கு பாத்திமாவும், தகப்பன் இஸ்மாயில் ஹாஜியாரும் இரண்டு சின்னப் பிள்ளைகளும்.

முஸ்லீம் வட்டாரத்தில் தாம் முன்பு வாழ்ந்த வாழ்க்கையை ஹாஜியார் பலதடவைகள் தேவகிக்கு விபரித்திருக்கிறார். ''எல்லோரும் சகோதரங்களாக வாழ்ந்தோம் தங்கச்சி... இந்த 'பொலிடிக்ஸ்' எங்களையெல்லாம் இப்படி அனாதைகளாக்கிப் போட்டுது'' — ஹாஜியார் நிறைய அரசியல் கதைப்பார். பொழுதுபோக தேவகியும் கேட்டுக்கொண்டிருப்பாள். ஆனால் முன்புதான். ராணி வந்தபின்பு வெகுவாகக் குறைந்து விட்டது.

ராணிக்கு ஹாஜியாரும் ஆறுதல் சொன்னார் — யார் செய்தாலும் பிழைதான் தங்கைச்சி. அல்லாஹ் அனைத்தையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறான்..

தேவகி பாண்வெட்டும் சிறிய மேசைக்கத்தியினால் மீனை வெட்டிப் பார்த்தாள். செதில்களைத்தான் சுரண்ட முடிந்தது. அளவான துண்டுகளாக வெட்ட முடியவில்லை. மின்னலென முன்வீட்டில் வசிக்கும் தம்மிகா நினைவுக்கு வந்தாள்.

''தம்மிகா வீட்டில் கத்தி வாங்கிகொண்டு வாரன் ராணி... இந்த மேசைக்கத்தியாலும் வெட்ட முடியேலை..'' வாசலில் நின்றே ராணிக்குக் குரல் கொடுத்துவிட்டு தேவகி முன் வீட்டிற்குப் போனாள்.

தம்மிகா குடும்பம் தேவகிக்கு நீண்டநாள் சிநேகம். தம்மிகாவின் கணவன் ஜேமிஸ் ஐயாவும் தேவகியின் கணவனும் சந்தித்தால் நேரம் போவதும் தெரியாமல் கலை, இலக்கியம், ஓவியம், அரசியல் பற்றிப் பேசுவார்கள். ஜேமிஸ் ஐயா விமான நிலையத்தில் டாக்ஸிச் சாரதி. பொழுது போகாத வேளையில் தூரிகை தூக்குவார். ஓவியங்கள் வரைவார்.

பாத்திமா, சிசிலியக்கா வீட்டில் தேவகி கத்தி கேட்கத் தயங்க மாடும்

www.tamilarangam.net



பன்றியும் காரணம். தம்மிகாவின் வீட்டைப் பொறுத்தவரையில் எந்தத் தயக்கமும் இல்லை. அங்கு இரண்டும் காச்ச மாட்டார்கள் என்பது அவளுக்குத் திண்ணம்.

பௌத்த மதத்திற்கும் இந்து மதத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை தனக்குத் தெரிந்த அரைகுறைச் சிங்களத்தில் தேவகி தம்மிகாவுடன் உரையாடுவதுண்டு. இவர்களின் கலந்துரையாடல் மதம், குடும்பம், சுற்றம் என ஒரு வட்டத்துக்குள் சுழலும். ஜேமிஸ் ஐயாவும் தேவகியின் கணவனும் அந்த வட்டத்துக்கு வெளியே சுழன்றவர்கள்.

''தம்மிகா... தம்மிகா..'' – குரல் கேட்டு வெளியே வந்து வரவேற்றது ஜேமிஸ் ஐயா. தேவகியைக் கண்டு தம்மிகாவை அழைத்தார்.

''வாருங்கள் அக்கா... என்ன அவசரம்?'' . கத்தி காணாமல்போன விபரம் சொன்னாள் தேவகி.

''பிள்ளைகள் அப்படித்தான். எங்காவது தொலைத்திருப்பார்கள். இப்பொழுது பிள்ளைகளுக்குக் கத்திகளுடன்தான் விளையாட்டு. இன்னும் சிறிது நாளில் துப்பாக்கிகளுடன் விளையாடுவார்கள்...'' ஜேமிஸ் ஐயா சிரித்துவிட்டுக் குறையில் நின்ற ஓவியத்துக்கு வர்ணம் தீட்டத் தொடங்கினார்.

அந்த வீட்டின் சுவர்களை அவர் வரைந்த ஓவியங்கள் அலங்கரிக்கும். அவற்றுள் தேவகியைப் பெரிதும் கவர்ந்த ஓவியம் அந்தப் புத்த விஹாரை ஓவியம்தான் – அந்த ஓவியத்திற்குத் தனது கணவனே காரணம் என்பதும் அவளுக்கு உள்ளூர பெருமிதம்தான். கணவன் தான் பார்த்த சிங்களக் குறுந்திரைப்படத்தினை தேவகியிடம் சொல்லி வியந்ததுடன் நிற்கவில்லை; ஜேமிஸ் ஐயாவிடமும் ஒரு கதையளப்பில் கூறியிருந்தான்.

இரண்டு நாட்களில் அக்குறுந்திரைப்படக் காட்சி அவரது கைவண்ணத்தில் சித்திரமாகிவிட்டது. கணவன் அவுஸ்திரேலியாவுக்குப் புறப்படும் வேளையில் தனது நினைவாக எடுத்துச் செல்லுமாறு ஜேமிஸ் ஐயா கொடுத்த அந்த ஓவியத்தை விமானப் பயணச் சிரமங்கள் கருதி, 'உங்களிடமே இருக்கட்டும்' என விட்டுச் சென்றான்.

அழகான காலைப் பொழுது; பலவர்ண முக்கோணக் கொடிகள் தொங்கி ஆடிக்கொண்டிருக்கும் அரசமரம். அருகே புத்த விஹாரை. மக்கள் நின்றும் அமர்ந்தும் தலை கவிழ்த்தும் வணங்குகிறார்கள். விஹாரையின் வெளி வீதியில் கறுப்பு நிற 'பென்ஸ்' கார். அதிலிருந்து இறங்கி வந்தவர்கள் என உணரவைக்கும் விதத்தில் செல்வச் செழிப்போடு அரசமரத்தின் வேர்களுக்கு முட்டிகளிலிருந்து பால் வார்க்கும் ஒரு குடும்பம். 'பென்ஸ்' கார் தரிப்பிடத்தின் அருகே வீதியோர 'முனிசிப்பல்' குழாயில், ஒட்டி உலர்ந்த வயிற்றோடு எலும்பும் தோலுமாகக் காட்சியளிக்கும் ஒரு சிறுவன் தண்ணீர் ஏந்திக் குடிக்கும்

www.tamilarangam.net



காட்சி. சாதாரண ரசிகனுக்கும் இலகுவில் புரிந்து கொள்ளத்தக்க அற்புதமான சோகச் சித்திரம்.

கொழும்புத் திரையுலகில் பார்த்து ரசித்த அந்தத் குறுந்திரைப்படத்தைப் பற்றி கணவன் சொன்னபோது அந்தக் கதையில் ஆர்வம் காண்பிக்காமல் அசட்டையாக இருந்த தேவகியை 'தானும் பார்க்க வேண்டும்' எனத் தூண்டிய உயிரோவியம் அது! அதற்குள் அரசு அப்படத்திற்குத் தடை விதித்துவிட்டது.

எப்போதோ பார்த்த திரைப்படம் பற்றி ஜேமிஸ் ஐயாவிடம் அவள் கணவன் சொன்னபோது அவரும் அதனைப் பார்க்கத் தவறியதும் அதற்காக வருந்தியதும் தெரிந்ததே. ''கலைஞர்கள் மென்மையானவர்கள். சூழலால் பாதிக்கப்படுபவர்கள். ஏதோ பேச்சுவாக்கில் அவரிடம் தகவல் சொன்னதுதான் தாமதம் – கேட்டதை மனதில் பதித்து ஓவியமாக்கிவிட்டாரே... கெட்டிக்காரன்'' – தேவகிக்குப் பழைய நினைவுகளை இரைமீட்டிப் பார்க்கையில் இன்பமாகச் சோகம் துளிவிட்டது.

தம்பிகாவிடம் கத்தி வாங்கிவந்து மீன் வெட்டிக் கறியும், பொரியலும் வைத்துப் பிள்ளைகள் வரவும் உணவு பரிமாறப்பட்டது. பிள்ளைகள் வந்துவிட்டால் ஆரவாரத்துக்குக் குறைவில்லை. பூவரச மரத்தடியில் மணல் வீடு கட்டி அது யாருக்குச் சொந்தம் என்பதில் சண்டையும் பிடித்துத் தண்ணீரும் மண்ணும் அளைந்து விரல் நகக்கண்களில் அழுக்கு ஏந்தித் தாய்மாரிடம் ஏச்சு வாங்கி, குளித்துச் சுத்தமாக்கிய பிஞ்சுகளும் மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டன.

பிள்ளைகள் பாடசாலைக்குப் புறப்படும் தருணம் பிள்ளைகளின் உணவுவேளை தேவகிக்கு ஒரு போராட்டக் களம்தான்.

மீன்வெட்டும் கத்தி விசாரணைக்குள்ளானது.

''யார் எடுத்தது? எங்கே தொலைந்தது?'' தேவகி உணவு பரிமாறிக் கொண்டும் சிறியவனுக்கு உணவூட்டிக் கொண்டும் கேட்டாள்.

''எங்களுக்குத் தெரியா...'' பிள்ளைகள் ஏகமாகக் குரல் கொடுத்தன.

''உண்மையைச் சொல்ல வேண்டும், இல்லாட்டி அடிபோடுவேன்...'' தேவகி குரலைக் கடுமையாக்கியும் பார்த்தாள்.

ராணியின் மகன் மட்டும் பெரியம்மாவை அடிக்கொருதரம் மிரண்டு பார்த்தான். அவன் மிரட்சிப் பார்வை ஒன்றும் அங்கு புதிதல்ல. வீட்டில் 'முழியன்' என்றும் அவனுக்குப் பட்டப் பெயர் என்பது ராணிக்கும் தேவகிக்கும் தெரியும். இந்தப் பட்டம் சூட்டி மகிழும் – கோவப்படும் – தர்க்கப்படும் குண இயல்புகளில் புரையோடியுள்ள குழந்தைத்தனத்தைத் தேவகி ரசித்தாலும், ''அப்படியெல்லாம் சொல்லக்கூடாது... கெட்ட பழக்கம்'' என்று கண்டிக்கவும்

www.tamilarangam.net



தவறுவதில்லை.

ஒரு பொருள் அதுவும் கணவன் விருப்பத்துடன் வாங்கிக் கொடுத்த அன்றாடம் தேவைப்படும் பொருள் காணாமல் போனதில் தேவகிக்கு வருத்தமே. மீண்டும் மீண்டும் தேடிப்பார்த்து களைத்துச் சோர்ந்தாள் தேவகி. பிள்ளைகள் பின்புற முற்றத்தில் கும்மாளம் போடப் போய்விட்டன. ராணி கதவைச் சாத்திக் கொண்டுவிட்டாள்.

தேவகிக்கு அயர்வு; பாயை விரித்துச் சின்னவனை அருகில் போட்டுக்கொண்டு கண்ணயர்ந்தாள். கணவன் இருக்கும் காலத்தில் அவளை இப்படிப் பகல் தூக்கம் போட அனுமதிக்கமாட்டான். வேலையால் திரும்பியதும் 'பகல்ல தூங்கினாயா?' என்ற விசாரிப்புடன் அவன் நிற்பதில்லை; பிள்ளைகளிடமும் கேட்டுத் தெரிந்து சந்தேகம் தீர்ப்பான். கணவன் அவுஸ்திரேலியாவுக்குப் போனதன் பின்பு பகல் பொழுதுக்குமேல் வீட்டில் ஒரு அலுவலும் இல்லையென்றால் ஒருமணி நேரம் தூங்குவாள் தேவகி.

தலைமாட்டில் மெல்லிதாக விசும்பல் ஓசை.

''பெரியம்மா.. பெரியம்மா...'' – தேவகி திடுக்கிட்டு விழித்தாள். ராணியின் இளைய மகன்.

''என்னடா.. ஏன் அழுகிற... யரும் அடிச்சாங்களா?'' தேவகி அவனை இழுத்து மடியில் வைத்துக் கொண்டாள்.

''இல்லை பெரியம்மா... நீங்க எனக்கு அடிப்பீங்களா...?''

''ஒருநாளும் நான் உனக்கு அடிச்சதில்லையே.. இப்ப ஏன் அழுகிறாய்?'' அவன் தலையைக் கோதினாள்.

''பெரியம்மா.. அந்தக் கத்தியை நான்தான் எடுத்தன். என்னை அடிக்க வேண்டாம்... எங்கட அம்மாட்ட சொல்ல வேண்டாம் பெரியம்மா...'' பிள்ளை விம்மி விம்மி அழுதான்.

''சரி.. சரி... அழாத... நான் சொல்ல மாட்டன். அடிக்கமாட்டன்..'' கண்ணைத் துடைத்து விட்டாள்.

''அந்த மீன் வெட்டுற கத்தியை வேலியில் ஒளிச்சு வைச்சிருக்கிறன்.. எடுத்துத் தரவா..?''

''என்ன... வேலியில் ஒளிச்சு வைச்சியா? ஏன் முதல்லயே சொல்ல இல்லை... மீன்வெட்டுறதுக்காக நான் எங்கேயெல்லாம் தேடினேன்.. ஏன் உனக்கு அந்தக் கத்தி.. அதனோட என்ன விளையாட்டு..

''பெரியம்மா.. பெரியம்மா... எங்கட அப்பாவைக் கொலை செஞ்சவங்கள் இங்கயும் வருவான்கள். அவனுகள் வந்தா வெட்டிக்

www.tamilarangam.net



கொல்லவேணும் பெரியம்மா. அதுக்காகத்தான் அதை ஒளிச்சு வைச்சிருக்கிறன்''

தேவகி அதிர்ந்தாள். அந்தப் பிஞ்சு அவள் அரவணைப்பில் இறுகியது. பனித்த கண்ணீரை சிரமப்பட்டு அடக்கினாள். பிஞ்சு மனதின் தர்மாவேசம் புரிந்தது. ஓ.. இதென்ன வாழ்க்கை. இந்தக் குழந்தைகளை எப்படி வளர்க்கப் போகிறோம். தேவகிக்குப் பயமாகவும் இருந்தது.

''சரி.. சரி, நீ போய் விளையாடு.. அவுங்கள் இங்கே வரமாட்டாங்கள்... நீ ஒன்றுக்கும் பயப்படாத.. பெரியம்மா இருக்கிறன்... போய்க் கத்தியைக் கொண்டுவந்து குசினியில் பத்திரமாக வை.. நான் யாருக்கும் சொல்லவில்லை..'' தேவகி தங்கை மகனைத் தேற்றி அனுப்பினாள்.

அவன் துள்ளிக் கொண்டு ஓடினான்.

* * *

தேவகியின் பகல் தூக்கம் கலைந்தது. துயரங்கள் தேங்கித் துயில் கலைந்த கணங்களில் கணவன் நினைவே ஓடுகிறது. அந்நியம் சென்றவனுக்கு இந்த அவலங்களை எழுதி ஆறுதல் தேடியவள் தேவகி. இன்றும் அவளுக்கு எழுதுவதற்குப் 'புதிய செய்தி' கிடைத்தது. ஒவ்வொரு கடிதத்திலும் புதினம் கேட்டெழுதும் கணவனுக்கு எழுத 'கத்தி காணாமல்போன கதை' சுருக்கெண்டது.

ஒருக்கழித்து படுத்தவாறு யோசித்தாள். பிள்ளைகளின் தம்மாளம் உச்சமாகிவிட்டது. முற்றத்துத் திண்ணையில் போய் அமர்ந்து வேடிக்கை பார்த்து ரசித்தாள்.

பொழுது சாய்ந்தது – பிள்ளைகளைக் குளிக்கவார்த்து உடைமாற்றி சுவாமி அறையில் வரிசையாக நிற்கவிட்டுத் தேவாரம் பாடச் செய்து, படிக்க வைத்து, இரவு உணவு கொடுத்து உறங்கவைப்பதற்குள் தேவகி களைத்துத்தான் விடுவாள்.

தங்கை ராணி ஒத்தாசையாக சமையல் அறையில் நிற்பதோடு சரி.

ராணியின் மகன் கத்தி எடுத்து மறைத்த காரணத்தைச் சொல்லாமல் – அது காணாமற்போய் மீண்டும் கிடைத்தமைக்குத் தனது கவலையீனமே என்று சிரித்தவாறு பழியைச் சுமந்தாள் தேவகி.

''அக்காவுக்கு இப்பொழுது யோசனை அதிகம்தான்.. ஆற்றில போட்டுக் குளத்தில தேடுற கதைதான்... தானும் தடுமாறி மற்றவங்களையும் தடுமாறச் செய்யிறது.''

''இல்ல.. ராணி, இந்த அலுமாரிக்குப் பின்னால்தான் இருந்தது. நான்தான் அங்க வைச்சிட்டு மறதியாகத் தேடினேன்.'' – தங்கை

www.tamilarangam.net



மகளைக் காட்டிக்கொடுக்காமல் அவனுக்களித்த உறுதிமொழி காக்கப்பட்டது.

''அடுத்த தடவை கத்தி காணாமல் போனால் முதலில் அலுமாரிக்குப் பின்புறம் தேடினால் சரி என்று சொல்லுங்கோ'' – ராணி கலகலவெனச் சிரித்தாள்.

நீண்ட நாட்களின் பின்பு ராணி சிரித்துத் தேவகி பார்த்தாள். பெருமூச்சே தேவகியின் பதிலாகியது.

பிள்ளைகளை உறங்கவைத்தபின்பே அக்காவும் தங்கையும் சாப்பிட அமருவார்கள். இருவரும் கையலம்ப எழுப்புவதற்குள் இரவு பத்து மணியாகிவிடும். கை உலர்ந்தாலும் 'கதை' நிற்காது தொடரும். ராணியின் கல்முனை அனுபவங்கள், சொந்தங்களின் விவகாரங்கள், தேவகியின் கணவன் எழுதும் அவுஸ்திரேலிய பருவகால மாற்றங்கள் இங்கு கதையாகிக் கரையும்.

ராணியும் படுத்தபின்பு நெடுநேரம் விழித்திருந்து புத்தகம் படிப்பாள் தேவகி. புத்தகம் 'போர்'அடித்தால் கடிதம் எழுதுவாள். எழுத அமர்ந்தால் – முடித்து உறையில் இட்டு ஒட்டுவதற்கு இரண்டு மணிநேரமாவது அவளுக்கு வேண்டும். ஒவ்வொரு கடிதமும் முற்றுப்பெறும் போதும் – ''அத்தான்... எழுத நிறையவுண்டு. கண்ணைச் சுழற்றுகிறது. உங்கள் 'வாரிசு வாலுகள்' உறங்கிய பின்புதான் எழுதுகிறேன். இப்பொழுது இங்கு நேரம் இரவு 12 மணி'' என்ற வசனமும் இணையும்.

மறுநாள் தபாலில் சேர்ப்பதற்காய் கடிதத்தைக் 'ஹேண்ட்பேக்கில்' வைத்துவிட்டு இளையவனை அணைத்துக் கொண்டு சுருண்டுவிட்டாள்.

நாய்களின் குரலே இரவின் அமைதியை அறுக்கும். தூரத்தில் ஓடும் வாகனங்களின் இரைச்சல் சன்மையாகக் கேட்கும். 'ஷெல் அடி', 'குண்டுவீச்சு'ச் சத்தங்கள் அற்ற அமைதியில் ஊர் உறங்கினாலும் பொழுது புலர்ந்தபின்பே எத்தனைபீ காணாமல் போயினர் – எத்தனை சடலங்கள் கடற்கரையில் ஒதுங்கின – எத்தனை உடல்கள் டயர்களுடன் எரிக்கப்பட்டன முதலான அதிர்ச்சிகள் தெரியவரும்.

'யார் செய்த புண்ணியமோ, இந்த மனுஷன் இப்பொழுது இங்கில்லை... இருந்திருந்தால் இவரையும் தீவிரவாதி என்று பிடிச்சு எரிச்சிருப்பாங்கள்'. சம்பவங்கள் அறியும் வேளைகளில் தேவகி மனம்கசிவாள். பொழுது விடியும் பொழுது பலரின் உயிர்கள் பிரிந்திருக்கும் – இல்லை – பிரிக்கப்பட்டிருக்கும் நகரத்தில் உயிரைக் கையில் பிடித்தாவாறு பொழுதுகளை நகர்த்தும் குடிமக்களைப் பற்றியும் தேவகி தயக்கத்துடன் எழுதுவதுண்டு.

இரவில் வாகனங்களின் ஓசை அருகாமையில் கேட்டால் தூக்கமே

www.tamilarangam.net



வராது. ''முருகா.. முருகா..'' தியானமே தொடரும்.

வேகமாக வந்த வாகனம் ஒன்று 'கிரீச்'சிட்டு நின்றது – கனவா?

இல்லை – தேவகி திடுக்கிட்டு எழுந்தாள். வீட்டின் வெளியே 'கேட்டு'க்கு முன்பாக நின்றது போன்ற உணர்வு. எழுந்தாலும் எப்படிப் பார்ப்பது? யன்னலைத் திறக்க வேண்டுமே... யன்னலருகே வந்து நின்று கொண்டாள். நாய்களின் குரைப்பு அதிகமாகியது.

''இல்லை.. இல்லை... நான் இல்லை.. என்னை விடுங்கள்'' – ஓ.. இது ஜேமிஸ் ஐயாவின் குரல் அல்லவா?

''என் கடவுளே... அவரை ஒன்றும் செய்ய வேண்டாம். அவருக்கும் அதுக்கும் சம்பந்தம் இல்லை. அவர் டாக்ஸி ட்ரைவர்'' – இது தம்மிகா தானே. தேவகிக்கு நெஞ்சை அடைத்தது. ஏதோ உருண்டு திரண்டு தொண்டையில் ஏறியதுபோன்ற உணர்வு. கணங்களில் அவளுக்கு சகலமும் புரிந்துவிட்டது.

வாகனம் பறந்துவிட்டது. யன்னலை மெதுவாகத் திறந்து பார்த்தாள். தம்மிகா முற்றத்தில் விழுந்து புரண்டுகொண்டிருப்பது தெரிகிறது. அக்கம்பக்கத்துச் சனங்கள் கூடிவிட்டனர். ராணியைத் தட்டி எழுப்பிவிட்டு தேவகியும் ஓடினாள்.

''ஐயோ.. அவங்கள் அவரையும் பிடித்துக்கொண்டு போறாங்கள்'' தேவகியைக் கட்டிப்பிடித்துக் கதறுகிறாள் தம்மிகா.

தேவகிக்கு இன்னும் பிரமை பிடிபடவில்லை. ''சொல்லுங்கோ... என்ன நடந்தது?''

''யாரோ 'பெட்டிஷன்' போட்டிருக்கிறாங்கள். ஜேமிஸ் ஐயாவுக்கும் அவங்களுக்கும் தொடர்பாம்... இவர் முன்பு அவங்களுக்குப் 'போஸ்டர்'கள் வரைந்து கொடுத்திருக்கிறாராம் '' – தம்மிகா தலையில் அடித்துக்கொண்டு கதறுகிறாள்.

மறுகணம் மயங்கிச் சரிந்தாள். யாரோ தண்ணீர் கொண்டுவந்து தெளித்தனர். தேவகி, தம்மிகாவை மடியில் வைத்துத் தேற்றினாள்.


''ஜேமிஸ் ஐயாவை பிடித்துச் செல்வோர் விசாரித்துவிட்டு உயிரோடு விட்டு விட வேண்டும்'' – மனதிற்குள் பிரார்த்தித்தாள்.

''சீ... இதென்ன வாழ்க்கை... யாருக்குத்தான் பாதுகாப்பு...?'' கணவனுக்கு எழுதுவதற்கு இன்னும் இருக்கிறது.

***

www.tamilarangam.net






கிணற்றடியில்
கிளைகள் பரப்பிப் பூத்திருக்கும்
வேப்பமரத்தில்
சில நாட்களாகவே
ஒரு குஞ்சுக்காகம் கரைகிறது!

எங்கள் தேசத்து மனிதரைப் போலவே
என்ன துயரம் நேர்ந்ததோ?

வாழ்வில் இன்னமும்
எஞ்சியே உள்ள நாட்களைக் கழிக்கும்
அம்மா
தம்பி வரப்போகிறானென்று
தனது நம்பிக்கையைத் தெரிவிக்கின்றாள்.

ஏழு ஆண்டுகளின் பின்னால்
மறுபடியும் புறப்பட்டு
சொல்லாமலே போகின்ற கூட்டத்தின் நடுவே
கடைசித் தம்பியும் போய் விட்டான்.இருள் சூழ்ந்த
ஒரு நேரம்
ஊரும் அடங்கிப் போய்விட
வானத்து நட்சத்திரங்களின் மறைவில்
தேசத்தின் புதல்வர்களில் ஒருவனாய்
அவன் வரக்கூடும்.
( புதிதாய் அரும்பும் மீசையும் இருக்குமோ? )

அந்நியர்களால் தொடர்ந்து
கறைபடியும் தேசம்.
தெருக்களில் நிர்வாணமாய்
புதிய துப்பாக்கிகளின் நடமாட்டம்.

காற்று
எங்கள் கடலிலும் மண்ணிலும்
யன்னலைக் கடந்து அறைகளிலும்
வீசிக் கொண்டுதான் இருக்கிறது.

www.tamilarangam.net



வாழ்வதற்காக நாம்
போராடியாக வேண்டும்.

ஒரு அதிகாலையில்
பனி படர்ந்த புற்களின் மீது
புதிய தலைமுறையொன்று
குஞ்சுப் பாதங்கள் பதித்து எழும்.

வயல்களில் உழவன்
குரல் எடுத்துப் பாடுவான்.

எங்கள் தேசத்தின் மனிதர்களும்
நிமிர்ந்தே செல்வர் .

# நிலவும் நானும்

நீண்ட புல்வெளி
நிலவு
வானத்தில் எழுந்து கொண்டிருந்தது.

நான்
ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருந்தேன்.
மெல்ல வீசிய குளிர் காற்று
என்னைக் கடந்து சென்றது.
வர இருக்கும் குளிர் காலத்திற்கு
கட்டியம் கூறுகிறதோ?

மெல்ல எழுந்து நடந்தேன்.
எங்கிருந்தோ ஒரு குழந்தையின்
அழுகை ஒலி
இதமாக இருக்கிறது
சோகமான ஒரு நேரம்.

உங்களுக்கும் நினைவிருக்கக் கூடும்
ஒரு சனிக்கிழமையாய் இருக்கும்
கிணற்றடியில் இறைத்துக் கொண்டிருந்த
தண்ணீரில் அள்ளித் தோய்ந்து
பலா இலையை மடித்துக் கோலி
ஈக்கிள் துண்டை முறித்துச் செருகி
ஒடியல் மீன் கூழை வார்த்து
அம்மா அப்பா தம்பி ஆச்சியென
சுற்றமும் சூழ இருந்து
உறிஞ்சிக் குடித்த நாட்கள்
உங்களுக்கும் நினைவுக்கு வரக்கூடும்.

இழந்தோம்
நாட்களை இழந்தோம்!
உறவுகளை இழந்தோம்!!
பதிவுகளை இழக்கின்றோம்!!!

தேசத்தையும் மண்ணையும்
மொழியையும் மறந்து
புதிய தலை முறை வளர்கிறது.

www.tamilarangam.net



# செழியன்



Canada

அகதிகள் கூட்டத்தின்
முகங்களை இழக்கும்
முகமூடி மனிதர்களுடன்
பேசுவதற்கு அதிகம் இல்லை.

ஒரு அதிகாலை வேளையாய் இருக்கலாம்
அந்தி சாயும் நேரமாயும் இருக்கக்கூடும்
அந்தி சாய்ந்து இருள் சூழந்து
நிலவு எழும் நேரமாயும் கூடவிருக்கும்.

நான்
என் தேசத்திற்குச் செல்வேன்.

தேசம் எரிகின்ற போதும்
அது எழுகின்ற போதும்
வாழ்கின்ற
என் தேசத்து மனிதர்களோடு
புன்னகை செய்வேன்.

செழியன் – சமகாலக் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர். சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் ஈழத்திலிருந்து வெளியேறி, வெளிநாட்டில் வாழ்பவர். இருப்பினும் தாயகத்தின் மீதான பற்றுதலையும், அங்குள்ள மக்களின் நாளாந்த வாழ்க்கையையும், விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய அவரது சிந்தனைகளையும் கவிதைகளாய் வடிப்பவர். இதுவரை இவரின் 3 கவிதைத் தொகுப்புகள் பிரசுரமாகியுள்ளன. மூன்றாவது தொகுதியான 'அதிகாலையைத் தேடி' சித்திரைமாதம் கனடாவில் வெளியாகியுள்ளது.

*பதிப்பாளர்: காலம் வெளியீடு.*

*முகவரி :* *Kaalam Veliiyiedu, 3000 Victoria Park Avenue #438, North York, Ontario, Canada.*

www.tamilarangam.net



# சிங்களர் கதை

— எஸ். பொ

## (3) விஜய நிவேதிக்கப்படுதல்

உலகின் வழிகாட்டியானவர் முழு உலகத்தின் இரட்சிப்பினைச் சாத்தியமாக்கிய பின்னர், மிக ஆனந்த அமைதி நிலை அடைந்து, தமது நிப்பான படுக்கையிலே கிடந்து, கடவுளர் கூடிய சபையிலே, பேசுபவர்களிலே அதி சிறந்தோரான அந்த மகா முனியவர், தமது பக்கலில் நின்ற சக்காவுக்கு [= இந்திரன்] வருமாறு சொன்னார்: 'சீஹபாகுவின் மகனான விஜய லாலா நாட்டிலிருந்து தனது எழுநூறு அடியாள்களுடன் லங்காவுக்கு வந்துள்ளான். ஓ, கடவுள்களின் பிரபுவே! லங்காவில் என் மதம் நிறுவப்படும். எனவே, அவனது அடியாள்களுடன் சேர்த்து அவனையும் லங்காவையும் கவனமுடன் பாதுகாக்கவும்.'

ததாதகரின் வார்த்தைகளைச் செவியுற்ற கடவுளர்களின் பிரபுவானவர் [இந்திரன்], லங்காவைப் பாதுகாக்கும் பொறுப்பினை, தாமரையை ஒத்த வண்ணமுடைய கடவுளிடம் ஒப்படைத்தார். [உபலவண்ணக் கடவுள் என்பது விஷ்ணு. உபல என்பது நீல நிறத் தாமரை. விஷ்ணுவை நீலவண்ணக் கடவுளெனக் குறித்தல் இந்து மரபுமாகும்.]

www.tamilarangam.net



சக்காவிடமிருந்து பொறுப்பினைக் கடவுள் [விஷ்ணு] ஏற்றுக்கொண்டதும், லங்காவுக்கு மிக விரைவாக வந்து, தேசாந்திரியான துறவி வேடத்திலே ஒரு மரத்தடியில் அமர்ந்து கொண்டார். விஜயவின் அடியாள்கள் அனைவரும் அவரிடம் வந்து, 'ஐயா, இது என்ன தீவு?' என்று கேட்டார்கள்.

'இது லங்கா தீவு' என்று அவர் பதிலளித்தார். 'இங்கு எந்த மனிதர்களும் இலர்; இங்கு எந்த ஆபத்தும் எழமாட்டாது.' இவ்வாறு கூறிய அவர், தமது கமண்டலத்திலிருந்த தண்ணீரை அவர்கள்மீது தெளித்து, அவர்களுடைய கைகளிலே நூல் கட்டிய பின்னர், ஆகாய மார்க்கத்தில் மறைந்து போனார். [பேய் பிசாசுகளிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வல்ல நூல் என்கிற அர்த்தத்தில் இது கையாளப்பட்டுள்ளது.]

அப்பொழுது குவண்ணாவின் சேவகியாகிய யஷினி ஒருத்தி, பெண் நாய் உருவத்திலே அங்கு தோன்றினாள். [இவளுடைய பெயர் சிசபாதிக என்பதை மகாவம்ச தீக மூலமும், கம்போடிய மகாவம்ச மூலமும் அறிய முடிகிறது.]

'கிராமம் உள்ள இடத்தில் மட்டுமே நாய்கள் காணப்படும்' என நினைத்த இளவரசனாலே தடுக்கப்பட்ட போதிலும், [விஜயாவின் அடியாள்களுள்] ஒருவன் அவளுக்கு [அந்த நாய்க்கு]ப் பின்னாற் சென்றான். அங்கே, அவளுடைய எஜமானி, குவண்ணா என்ற பெயரிய யஷினி, பெண் தபசியின் சக்தியாய், ஒரு மரத்தினடியில் அமர்ந்து நூல் நூற்றுக் கொண்டிருந்தாள். [அக்காலத்திலேயே, இலங்கையில் வாழ்ந்த இயக்கர்கள் நூல் நூற்று, ஆடைகள் அணியக் கற்றிருந்தனர்.]

தடாகத்தையும் அங்கு அமர்ந்திருந்த பெண் தபசியையும் கண்ட அவன், அங்கே குளித்து, நீர் அருந்தி, தாமரைக் குருத்துக்களை ஆய்ந்து, தாமரை இலைகளிலே [அவற்றைக் கோலி] தண்ணீர் எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

'நில்! நீ என் இரை!' என்று அவனுக்கு அவள் சொன்னாள். அப்பொழுது அந்த மனிதன் இறுக்கக் கட்டப்பட்டவனைப்போல அங்கு நின்றான். ஆனால், அவன் [அணிந்திருந்த] மந்திர நூலின் மகிமையினால் அவனை அவளாலே விழுங்க முடியவில்லை. யஷினி அவனை வேண்டிக் கொண்ட போதிலும், அந்த மனிதன் [கட்டியிருந்த] நூலைக் கைவிடவில்லை. அப்பொழுது யஷினி அவனைப் பிடித்துத் தூக்கி எறிந்தாள். அவன் அலறியவாறே ஒரு பாதாளத்துக்குள் வீழ்ந்தான். அங்கே, அவ்வாறே, அவனுக்குப் பின் ஒருவர் ஒருவராக, அந்த எழுநூறு அடியாள்கள் அனைவரையும் அவள் தூக்கி எறிந்தாள்.

அவர்கள் அனைவரும் திரும்பாததினால், விஜயவை அச்சம் கப்பியது. பஞ்ச ஆயுதங்களினால் [வாள், வில், வேல், கண்டகோடாலி, கேடயம் ஆகியனவே பஞ்ச ஆயுதங்களென்பர்] ஆயுதபாணியாகிய அவன்

www.tamilarangam.net



புறப்பட்டான். அங்கு ஓர் அழகிய தடாகத்தையும், அங்கிருந்து எந்த ஒரு மனிதனுடைய காலடித் தடமும் வெளிவராததையும், ஆனால் அங்கு ஒரு பெண் தபசி அமர்ந்திருப்பதையும் அவதானித்த அவன் நினைத்தான்: 'என் கூட்டாளிகள் நிச்சயமாக இந்தப் பெண்ணாற் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.'

'அம்மணி, என்னுடைய ஆள்களை நீ கண்டாயா?' என்று அவளிடம் அவன் கேட்டான். 'இளவரசே, உன் மக்களிடமிருந்து உனக்கு என்ன வேண்டும்? நீ குளிப்பாயாக; குடிப்பாயாக' என அவள் பதிலளித்தாள்.

அப்பொழுதுதான் அது அவனுக்குத் தெளிவாயிற்று: 'நிச்சயமாக இவள் ஒரு யஷினி; இவளுக்கு என் அந்தஸ்து தெரிந்துள்ளது.' தன் பெயரை உச்சரித்து, வில்லை உருவியபடி அவளுக்குக் கிட்ட அவன் விரைந்தான். கழுத்தினைச் சுற்றிப் போட்ட சுருகு தடத்தினால் அவன் அந்த யஷினியைப் பிடித்து, இடக் கையினால் அவன் [தலை] மயிரைப் பற்றி, வலக் கையிலே தனது வாளை எடுத்து ஓங்கியபடி கத்தினான்: 'அடிமையே! என் ஆள்களை என்னிடம் திருப்பித் தா. அல்லையேல், உன்னை நான் சங்கரிப்பேன்!' அப்பொழுது, பயத்தினால் இம்சைப்பட்ட அந்த யஷினி தன் உயிருக்காக மன்றாடினாள். 'ஐயா, எனக்கு உயிர்ப் பிச்சை அளி. நான் உனக்கு ஒரு இராஜ்யத்தைத் தருவேன். உனக்கு நான் ஒரு பெண்ணின் சேவைகளைச் செய்வேன். நீ விரும்பும் ஏனைய சேவைகளையும் செய்வேன்.'

தன்னைக் காட்டிக் கொடுக்கா வண்ணம், அந்த யஷினியை அவன் சத்தியப் பிரமாணம் செய்யச் செய்தான். அவள்மீது அவன் அதிகாரம் பெற்ற மாத்திரத்திலேயே, 'மிகக் கெதியாக என் மனிதர்களை இங்கு கொண்டுவா' என்றான். அவர்களை அவள் அங்கு கொண்டு வந்தாள். 'இந்த மனிதர்கள் பட்டினி கிடக்கிறார்கள்' என்று அவன் சொன்னதும், அவளாலே விழுங்கப்பட்ட வணிகர்களுடைய கப்பல்களிலே கிடைக்கப்பெற்ற அரிசியையும், மற்றும் உணவுப் பொருள்களையும், ஏனைய பலவிதமான பொருள்களையும் அவர்களுக்குக் காட்டினாள்.

[விஜயவும் அவனுடைய எழுநூறு அடியாள்களும் லங்காவில் முதன் முதலாகக் குடியேறிய மனிதர்கள் என்று புதிய வரலாறு எழுதப் புகுந்த மகாவம்ச சில உண்மைகளை முற்று முழுதாக மறைக்கவில்லை. விஜயவுக்கு முன்னரே இலங்கையில் இயக்கர்களும், நாகர்களும் வாழ்ந்தார்கள். திராவிட மொழி பயின்ற நாகர்கள் கடலோடிகளாகவும் வணிகர்களாகவும் திகழ்ந்தார்கள். அவர்கள் அரிசி உணவின் நாகரிகமும் அறிந்திருந்தார்கள். நாகர்களுடைய கப்பல்களை இயக்கர்கள் கொள்ளையடித்திருத்தல் சாத்தியம். அவ்வாறு கிடைத்த பொருள்களையே குவண்ணா அவர்களுக்கு அளித்தாள் எனக் கொள்ளினும் பொருந்தும்]

விஜயாவின் ஆள்கள் சோறும் கறிகளும் ஆக்கி, அவற்றை முதன் முதலாக இளவரசனுக்கு முன்னாற் படைத்ததும், அவர்கள் எல்லோரும்

www.tamilarangam.net



அவற்றைச் சாப்பிட்டார்கள்.

விஜயாவினால் அவளுக்கு அளிக்கப்பட்ட சாப்பாட்டின் முதற் பகுதிகளை உண்டதும், யஷினிக்கு மிகுந்த ஆனந்தம் உண்டாயிற்று. அவள் பதினாறு வயது அழகியின் உருவந்தாங்கி, எல்லா ஆபரணங்களினாலும் அலங்காரஞ் செய்துகொண்டு இளவரசனை அணுகினாள். மரத்தினடியிலே அவள் ஓர் அற்புத படுக்கையை உண்டாக்கினாள். அதனை மறைக்க அஸ்மானகிரி அலங்கரிக்கும் கூடாரம் ஒன்றினை அமைத்தாள். இதனைப் பார்த்த அந்த மன்னன் மகன், எதிர்காலத்தை எதிர்பார்த்தவனாக, அவளைத் தன் மனைவியாக ஏற்று, அந்தக் கட்டிலிலே அவளுடன் ஆனந்தமாகப் படுத்துக் கொண்டான். அவனுடைய அடியாள்கள் அனைவரும் அந்தக் கூடாரத்தைச் சுற்றிலும் தண்டிறக்கினார்கள்.

இரவு முன்னேறிய பொழுது, இசையும் பாடல்களும் கலந்த சத்தங்கள் அவனுக்குக் கேட்கலாயின. தனக்குப் பக்கத்தில் படுத்திருந்த யஷினியிடம் 'இந்தச் சத்தத்தின் அர்த்தம் என்ன?' என்று கேட்டான். அப்பொழுது யஷினி யோசித்தாள்: 'லங்காவில் மனிதர்கள் வாழ்வதற்கு நான் கருவியாக அமைந்தபடியால், இயக்கர்கள் என்னைக் கொன்றுவிடுவார்கள். எனவே, நான் இயக்கர்களை அழித்து, என் பிரபுவுக்கு அரச பதவியை நான் அளிப்பேன்'

அவள் இளவரசனுக்குச் சொன்னாள்: 'இங்கே சிறிஸவத்து என்று அழைக்கப்படும் இயக்க நகரம் ஒன்று இருக்கிறது. லங்கா நகரத்தில் வாழும் இயக்கர் தலைவருடைய மகள் இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிறாள். அவளுடைய தாயும் வந்திருக்கிறாள். [மகாவம்ச தீக என வழங்கப்படும் 'மகாவம்ச உரைகள்' என்ற நூலிலே தலைவன் பெயர் மஹாகாலசேன என்றும், மனைவி பெயர் கொண்டா என்றும், மணமகள் பெயர் பொலமித்தா என்றும் குறிக்கப் பட்டுள்ளன.] அவளுடைய கல்யாணத்துக்காக ஏழு நாள்கள் தொடரும் உயர் விருந்து ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பெருந் தொகையானவர்கள் கூடியிருப்பதினாலேதான் இந்தச் சத்தம் கேட்கின்றது. இன்றைக்கே நீ அந்த இயக்கர்களை அழித்துவிட வேண்டும். பிறகு என்னால் இது சாத்தியமற்றுப் போய்விடும்.'

அவன் பதிலளித்தான்: 'கண்களுக்குப் புலனாகாத இயக்கர்களை நான் எப்படிக் கொல்வேன்?'

அவள் சொன்னாள்: 'அவர்கள் எங்கெல்லாம் இருக்கக்கூடுமோ அங்கெல்லாம் நான் குரல் எழுப்புவேன். எங்கு என் குரலை நீ கேட்கிறாயோ, அங்கே தாக்கு! என்னுடைய மந்திர சக்தியால் உன் ஆயுதம் அவர்களுடைய உடல்களைத் தாக்கும்.'

அவளுடைய குரலைக் கேட்டு, அவள் சொன்னவாறே செய்து, எல்லா இயக்கர்களையும் அவன் கொன்றான். அவன் வெற்றிகரமாகப் போராடிய பின்னர், இயக்க அரசனுடைய ஆடைகளை அவன்

www.tamilarangam.net



அணிந்துகொண்டான். ஏனைய ஆடைகளை அவன் தன் அடியாள்கள் ஒவ்வொருவருக்கும் அளித்தான். [பௌத்தம் வளர்க்கத் தெரிவு செய்யப்பட்ட விஜயவையும் அடியாள்களையும் பார்க்கிலும் மேலான ஆடைகளை அக்கால இயக்கர்கள் அணிந்திருந்தார்கள் என்பது உட்பொருள்.]

அந்த இடத்திலேயே சில நாட்களைச் செலவு செய்த பின்னர், அவன் தம்பபன்னிக்குச் சென்றான். அங்கு தம்பபன்னி என்னும் நகரத்தை நிறுவிய விஜய, அமைச்சர்கள் சூழ, அந்த யஷினியுடன் அங்கே வாழலானான்.


விஜயவின் தலைமையிலே சென்ற அவர்கள் கப்பலிலிருந்து இறங்கி, களைப்பு மிகுதியினால், கைகளை நிலத்திலே ஊன்றிக் கொண்டு அமர்ந்திருந்தார்கள். செம்பாட்டு நிலத்தின் புளுதியைத் தொட்டு அவர்களுடைய கைகள் சிவப்பு நிறம் பெற்றபடியால், அந்தப் பிராந்தியமும், தீவு முழுவதும் தம்பபன்னி எனப் பெயரிடப்பட்டது. [தம்பன்னி என்றால் சிவந்த கை. பண்டைய கிரேக்கர்கள் இலங்கையை 'தப்ரபேன்' என்றே குறித்தார்கள். தாமிரம் = copper. தாமிர நிறமான இடம் என்ற பொருளில் தாமிரபரணி. தம்பபன்னி என்பதைச் சிலர் தம்பபண்ணை என்று தமிழ் வடிவம் கொடுத்து எழுதினார்கள்.] ஆனால், சீஹபாகு சிங்கத்தைக் கொன்றபடியால் சீஹள என அழைக்கப்பட்டபடியால், அவனுக்கும் அவர்களுக்கும் இருந்த தொடர்புகள் காரணமாக, விஜயவின் கூட்டாளிகளான அவர்கள் எல்லாருமே சீஹள என அழைக்கப்பட்டனர். [சீஹள பாளி வடிவம்; சிங்கள மொழியில் சிங்கள.]

இங்கும் அங்குமாக விஜயவின் அமைச்சர்கள் கிராமங்களை நிறுவினார்கள். அதே பெயருடைய மனிதன் கடம்பநதிக்குச் [இது அநுராதபுரவுக்குச் சமீபமாக ஓடும் மல்வத் ஓயா நதியாகும்] சமீபமாக அநுராதகம [என்னும் கிராமத்தை]வை நிறுவினான். அநுராதகமவுக்கு வடக்கில், கம்பீர நதி தீரத்தில் [அநுராதகமவுக்கு ஒரு யோசனை தூரத்தில், அதாவது ஏழு அல்லது எட்டு மைல் தூரத்தில், ஓடுகிற மல்வத் ஓயாவின் கிளையை இது குறிக்கும்] புரோகிதன் உபதீஸ உபதீஸகம [என்னும் கிராமம்]வை நிறுவினான். மற்றும் மூன்று அமைச்சர்கள் உஜ்ஜேனி, உறுவெலா, விஜித்த நகர் ஆகியவற்றைத் தங்களுக்காகக் கட்டிக் கொண்டார்கள். [விஜித்ததான் அதி தென் எல்லையில் அமைக்கப்பட்ட குடியிருப்பு ஆகும். இது காலவேவாவுக்கு அண்மையில் அமைந்திருந்தது என்று Tennent என்னும் வரலாற்று நூலாசிரியர் கருதுகின்றார்.]

நிலத்திலே அவர்கள் குடியிருப்புகளை அமைத்த பின்னர், அமைச்சர்கள் எல்லோரும் ஒன்றுகூடி வந்து, 'ஐயா, நீங்கள் அரசனாய் நிவேதிக்கப்படுவதற்குச் சம்மதித்தல் வேண்டும்' என்று இளவரசனிடம் சொன்னார்கள். ஆனால், அவர்கள் அவ்வாறு வேண்டிக் கொண்ட போதிலும், உயர்ந்த குடும்பத்துக் கன்னி ஒருத்தி ராணியாக நிவேதிக்கப்படும் வரையிலும், இளவரசன் தன்னை [அரசனாக]

www.tamilarangam.net





www.tamilarangam.net



நிவேதித்தலை மறுத்தான்.

தமது பிரபுவை [மன்னனாக] நிவேதித்திடல் வேண்டும் என்பதிலே மிகுந்த சித்தங்கொண்ட அமைச்சர்கள், வழிதுறை சிரமமாக இருந்த போதிலும், இது சம்பந்தமாக எழுந்த வியாகூலமான அச்சங்கள் சகலவற்றையும் வெற்றி கண்டு, பாண்டு மன்னனுடைய மகளைத் தங்களுடைய விசுவாசமுள்ள அரசனுக்கு மனைவியாகவும், மற்றும் அமைச்சர்கள் பணியாளர்கள் ஆகியோருக்கு, ஏனையோருடைய புத்திரிகளை [மனைவிகளாகவும்] மணங்கேட்கும் மணியிலே, அநேக விலையுயர்ந்த பரிசுகள், ஆபரணங்கள், முத்துக்கள் ஆகியவற்றுடன் ஆள்கள் சிலரைத் தெற்கிலுள்ள மதுரா நகரத்துக்கு அனுப்பி வைத்தார்கள்.

விரைவாகவே கப்பல் மூலம் மதுரா நகரைத் தூதுவர்கள் அடைந்ததும், மன்னனுக்கு முன்பாகப் பரிசுப் பொருள்களையும் கடிதத்தையும் வைத்தார்கள். தன்னுடைய மகளை அனுப்பி வைக்கச் சித்தங்கொண்டதினால், மன்னன் தனது அமைச்சர்களுடன் கலந்தாலோசித்து, முதலில் [விஜயாவின்] அமைச்சர்களுக்கு, ஏனையோரின் மகள்களான சுமார் நூறு கன்னிப் பெண்களைப் பெற்றுக் கொண்ட பின்னர், பறை அறைதல் மூலம் வருமாறு அறிவித்தான்: 'லங்காவுக்குத் தங்களுடைய ஒரு மகளை அனுப்பி வைக்க விருப்பமுள்ள மனிதர்கள், அவர்களுக்கு இரண்டு மடங்கு உடைகள் அளித்து, அவர்களைத் தங்களுடைய வீடுகளின் வாசல்களிலே நிறுத்தி வைப்பார்களாக. இந்த அடையாளத்தின் மூலம் அவர்களை நாம் அழைத்துச் செல்லலாம் என்பதை அறிந்து கொள்ளுதல் கூடும்.'

அவர்களுடைய குடும்பங்களுக்கு நட்ட ஈடு வழங்கி, அநேக கன்னிப் பெண்களைப் பெற்றுக் கொண்டதும், பெறப்பட்ட கன்னியரை அவர்களுடைய அந்தஸ்திற்கு ஏற்ப வரிசைப் படுத்தி, ஓர் அரசனின் கௌரவத்துக்கு ஏற்ற வகையில் யானைகள் – குதிரைகள் – பெரும்பார வண்டிகள், கலைஞர்கள், பதினெட்டுத் தொழிற் குழுக்களைச் சேர்ந்த ஆயிரம் குடும்பங்கள் ஆகியவற்றையும் ஏற்பாடு செய்து, தன் மகளைச் சகல ஆபரணங்களினாலும் அலங்காரஞ் செய்து, [எல்லாவற்றையும்] ஒரு கடிதத்துடன் வெற்றி பெற விஜயவுக்கு அனுப்பி வைத்தான்.

இந்தப் பெருந் தொகையான மனிதர்கள் மஹாதித்த என்ற இடத்திலே இறங்கினார்கள்: இந்தக் காரணத்துக்காகத்தான் அந்த இறங்குதுறை மஹாதித்த என வழங்கலாயிற்று. [இப்பழம் பதியை 'மாதோட்டம்' எனச் சைவத்தமிழும் வளர்த்த நாயன்மார்கள் குறிப்பிட்டார்கள். 'பொழில் அணி மாதோட்டம்', 'கடற் கரையினில் எழில் கமழ் மாதோட்டம்', 'மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டம்', 'மஞ்சை நடமிடு மாதோட்டம்' என்றெல்லாம் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தமது திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகத்திலே வாய் மணக்கப் பாடினார். 'வானத்துறு மலியுங்கடல் மாதோட்ட நன்னகரில் பானத்துறு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மொழியாளொடு பாலாவியின் கரைமேல்', 'மாவின் கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகரில்' என்றெல்லாம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது திருக்கேதீச்சரத் திருப்பதிகத்தில் பாடியதும் இந்தப் பழம் பதியையே.]

[இந்த 'மதுரா' தற்காலத் தமிழ் நாட்டிலுள்ள (தென்)மதுரையைக் குறிக்குமென மகாவம்ச மொழிபெயர்ப்பாளர் செய்கர் அபிப்பிராயப்படுகிறார். பூகோள ரீதியில் இஃது இலகுவான ஊகம். முத்துடைய பாண்டிய மன்னனை ஆண்டுதோறும் இரண்டு இலட்சம் மதிப்புள்ள முத்துச் சிப்பியைத் திறையாகக் கொடுத்து விஜயவின் தூதர்கள் மருட்டினார்களென ஊகித்தாரோ எனவும் அறியோம். சங்கத் தமிழ் வளர்த்த பாண்டினாட்டான் காவாலிகள் கூட்டத்தின் தலைவனுக்குத் தன் பெண்ணைக் கொடுத்தானா? லாலா நாட்டுக்குத் தெற்கில், கண்ணபிரானின் அவதாரத்துடன் சம்பந்தமுடைய வட மதுரை ஒன்று இருந்தது. 'பாண்டு' என்ற பெயர் படைத்தோர் அப்பகுதியை அரசாண்டார்கள் என்பதை மகாபாரதத்தின் மூலம் அறியலாம். குத்து மதிப்பாக பாண்டு புத்திரியுடன் நாலாயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் மாதோட்டம் வந்திருக்க வேண்டும். அப்படியாயின், அடுத்த தலைமுறையிலே தமிழ் பேசும் ஓர் இனமல்லவா உருவாகியிருக்க வேண்டும்?]

[இந்த நியாயங்களை எல்லாம் வைத்து, ஐம்பதுகளின் கடைக்கூறில் தினகரன் வார இதழில் விரிவான ஆய்வுக் கட்டுரை ஒன்றினை எழுதியிருந்தேன். அதிலே நான் குறிப்பிடாத செவிவழிக் கதை ஒன்று உண்டு. குலப்பெண்கள் மத்தியிலே துர்த்தைகளும் கலந்து வாழும் அவலம், ஒரு காலத்தில் மதுரையில் ஏற்பட்டதாம். அவர்களை அகற்ற மன்னன் திட்டம் ஒன்றை வகுத்தான். வைகை பெருக்கெடுத்த பொழுது, சந்தேகத்துக்கிடமான பெண்களை ஆற்றைக் கடக்கும்படி ஆஞ்ஞாபித்தான். தமது சேலைகள் நனையாதவாறு மார்புக்கு மேலே ஒதுக்கியவாறு, அம்மணமாகத் தொடைகளைக் காட்டியபடி அப்பெண்களிலே பலர் ஆற்றைக் கடந்தனர். இச் செயலால் அவர்களைத் துர்த்தைகளாக இனங்கண்டு, நாட்டுப் பிரஷ்டம் செய்து இலங்கைக்கு அனுப்பி வைத்தான். அங்கு அவர்கள் 'பெண்ணுக்கு வீங்கி'களை மணந்து சந்ததி பெருக்கி வாழ்ந்தார்களாம். இந்தக் கதைக்கும் விஜயவின் அடியாள்களுடைய திருமணங்களுக்கும் சம்பந்தம் இருக்குமோ?]

விஜயவுக்கு யஷினி மூலம் ஒரு மகனும் ஒரு மகளும் பிறந்தார்கள். [பாண்டு மகளான] இளவரசி வந்திறங்கிவிட்டாள் என்பதை இப்பொழுது கேள்விப்பட்ட அவன் யஷினிக்குச் சொன்னான்: 'என் அன்பே, பிள்ளைகள் இருவரையும் விட்டுவிட்டு, நீ இப்பொழுதே போய்விடு: அமானுஷ்ய சக்திபெற்றவர்களிடம் மனிதர்களுக்கு எப்பொழுதுமே பயம் உண்டு.'

ஆனால் இதைச் செவியுற்றதும் இயக்கர்கள் பற்றிய அச்சம் அவளைக் கப்பிக்கொண்டது. மீண்டும் யஷினிக்கு அவன் சொன்னான்:

www.tamilarangam.net



'தாமதிக்காதே! ஆயிரம் [நாணயங்கள்] செலவு செய்து பலி ஒன்றினால் உனக்கு அபிஷேகம் செய்கிறேன்.' மீண்டும் மீண்டும் அவளைக் கெஞ்சிக் கேட்டதும் பயனற்றுப் போகவே, அதன் மூலம் தீமையே நேரிடும் என அஞ்சியபோதிலும், தன் பிள்ளைகள் இருவரையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு லங்காபுராவுக்குச் சென்றாள்.

பிள்ளைகளை வெளியே இருக்கச் செய்து, அவள் மட்டும் நகரத்துக்குள் சென்றாள். நகரத்திலுள்ள இயக்கர்கள் அந்த யக்ஷினியை அடையாளங்கண்ட பொழுது, அவள் வேவுபார்க்க வந்திருக்கலாம் என்கிற அச்சத்தினால், அவர்கள் மத்தியிலே பெரும் குழப்பம் உண்டாயிற்று. ஆனால், ஆவேசம் கொண்ட ஒருவன், தன் முஷ்டியினால் ஒரேயொரு குத்துக் கொடுத்து யக்ஷினியைக் கொன்றான்.

அவளுடைய தாய்வழியில், அவளுடைய மாமனான இயக்கன் ஒருவன் நகருக்கு வெளியே வந்து அந்தப் பிள்ளைகளைக் கண்டபொழுது, அவன் அவர்களிடம் கேட்டான்: 'நீங்கள் யாருடைய குழந்தைகள்?' அவர்கள் குவண்ணாவுடைய குழந்தைகள் எனக் கேள்விப்பட்டதும் அவன் சொன்னான்: 'இங்கே உங்களுடைய தாய் கொல்லப்பட்டுவிட்டாள். உங்களை அவர்கள் பார்த்தால் உங்களையும் அவர்கள் கொல்வார்கள். எனவே, விரைவாக ஓடிப்போய் விடுங்கள்!'

அங்கிருந்து அவர்கள் விரைவாக சுமணகுத்தவுக்கு [சிவனொளிபாத மலைக்கு] ஓடிப்போனார்கள். இருவருள் மூத்தவனான சகோதரன், வளர்ந்ததும், இளையவளான தன் தங்கையைத் தன் மனைவியாகக் கொண்டு, மகன்களும் மகள்களும் பெற்றுப் பெருகி, மன்னனின் அனுமதியுடன், அங்கே, மலயாவில் வாழத் தலைப்பட்டனர். அவர்களுடைய சந்ததியாரே புலிந்தர்கள். [இலங்கையின் மத்திய பகுதி மலைப் பிரதேசமாகும். இந்தப் பிரதேசத்தின் தென்மேற்குப் பகுதி மலயா எனவும் மலயரட்ட எனவும் வழங்கப் பெற்றது. தற்காலத்தில் சப்பிரகாமுவ மாகாணம் என வழங்கும் பகுதிகளை உள்ளடக்கியதுதான் மலயரட்ட. சப்பிர என்பது புலிந்த என்பதும் ஒத்த கருத்துடைய சொற்கள். புலிந்தர் என்பது வேடர்களைக் குறிக்கும். வேடர்கள் சிலருக்குப் புலிந்தன் அல்லது புலிஞன் இயற்பெயராகவும் வழங்கிற்று. புலிஞன் என்னும் வேடுவ அரசன் ஆண்ட இடம் புலிஞந்தீவு என வழங்கிற்று. அதுவே, காலப்போக்கில் புளியன்தீவாக மருவிற்று. தற்கால மட்டக்களப்பு மாநகரத்தின் மையப் பகுதி புளியந்தீவாகும்.]

பாண்டு மன்னனின் தூதுவர்கள், மன்னன் மகளின் தலைமையில் கன்னியர்களையும் பரிசுப் பொருள்களையும் இளவரசன் விஜயவிடம் ஒப்படைத்தார்கள். தூதுவர்களுக்கு உபசரணைகள் செய்து, கௌரவங்கள் வழங்கிய பின்னர், விஜய, கன்னியர்களை அவர்களுடைய அந்தஸ்திற்கேற்ப தன் அமைச்சர்களுக்கும் சேவகர்களுக்கும் அளித்தான். சம்பிரதாயத்தின் பிரகாரம் அமைச்சர்கள் எல்லோரும் கூடிய அவையிலே விஜய நிவேதிக்கப்பட்டு, பாரிய விழா

www.tamilarangam.net



ஒன்றும் நியமிக்கப்பட்டது.

பின்னர், பவித்திரமான விழா ஒன்றிலே, விஜய, பாண்டு புத்திரியைத் தனது ராணியாக நிவேதித்து, தன் அமைச்சர்களுக்குச் செல்வங்கள் வழங்கினான். ஆண்டுதோறும் தன் மனைவியின் தந்தைக்கு, இரண்டு லட்சம் [நாணயங்கள் மதிப்புள்ள] முத்துச் சிப்பியை அவன் அனுப்பி வரலானான்.

வாழ்க்கையிலே தன்னுடைய பழைய தீய வாழ்க்கை வழிகளைக் கைவிட்ட, மனிதர்களின் பிரபுவான விஜய, தம்பபன்னி என அறியப்பட்ட நகரத்திலிருந்து, அமைதியும் நேர்மையும் துலங்க, முப்பத்தெட்டு ஆண்டுகள் அரசாண்டான்.

['பக்தர்களிடம் அமைதியான இன்பமும் பரவசமும் ஊட்டுவதற்காகத் திரட்டப்பட்ட மகாவம்சவின் 'விஜய நிவேதிக்கப்படுதல்' என்கிற ஏழாவது அத்தியாயம் இங்கு முடிவடைகின்றது' என்கிற வழக்கமான பாணியில் இந்த அத்தியாயமும் முற்றுப் பெறுகின்றது.]

## இது என் இயற்கை

ஆற்றின் அக்கரை வரைக்கும் தன்னை ஏற்றிச் செல்வாயா என்று சிலந்தி தவளையை இரந்து கேட்டது.

அஹ, மாட்டேன், நீ என்னைக் கொட்டிக் கொன்றுவிடுவாய் என்று தவளை சொன்னது.

மேலும் இரந்து சிலந்தி கேட்டபின் தவளை மனம்மாறி சிலந்தியை ஏற்றிக் கொண்டு ஆற்றைக் கடக்கும்போது சிலந்தி தவளையின் விலாவில் இறுக்கிக் கொட்டியது.

நஞ்சேறிச் செத்துக் கொண்டிருந்த தவளை கேட்டது, ''ஏன் இந்த அநியாயத்தைச் செய்தாய். நாம் இருவருமே அல்லவோ இப்ப உயிரிழக்கப் போகிறோம்?''

சிலந்தி சொன்னது, ''இது என் இயற்கை!''

www.tamilarangam.net



## சுகம்

— அசன்

வெள்ளை யரை வென்று விட
எண்ணை தேய்த்த எம தலையில்
கொள்ளை மூளை உண்டென்று
கூடிப்பேசிக் கொள்வோம் நிதம்

போன ஜென்ம பெருமைகளை
புழுகிப் பேசி அந்நியரை
மான பங்கம் செய்வதிலே
மனதில் நிறைவு பொங்கும் நிதம்

முகத்தை கிழித்து அடுத்தவரின்
அகத்தை தேடி அவலங்களை
வெளியில் எடுத்து விமர்சித்து
களித்தல் கூட தருமே இதம்

ஆன்மாவுக்கு விலை சொன்னால்
அதனை விற்று பணம் பண்ணி
அடுத்த வீடு வாங்கி அதில்
எடுக்கும் லாபம் இன்பம் தரும்

நினைவை தொலைத்து கனவுலகில்
நிஜத்தை தேடும் மனிதர்களில்
முகத்தை புதைத்து மறையவிட்டு
கனவில் மூழ்கி நனைதல் சுகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# MAYOOR VIDEO VISION

## FOR LASTING MEMORIES OF YOUR FUNCTIONS - BIRTHDAYS WEDDINGS - PROGRAMMES

With special effects which you have never seen before

Recorded under studio quality with High Resolution Chrome Tape

MVV

contact

**Moorthy - 555 3230** **Uthayan - 562 8537**

Mayoor video vision
24 Worthing Road
Highett, Vic 3190




*ஆதமி* தமிழ் சொற்தொகுப்புச் சாதனத்தின் உதவியுடன்
'மாபு' தமிழில் அச்சமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்